தென்மொழி

தலைவர்கள் தமிழ்நலம் காக்க!

செத்திடும் தமிழ்ஞா லத்தின்—
செந்தமிழ் நலத்தின்—நோக்கம்
ஒத்திடும் உணர்வால் மக்கட்
குண்மையில் பொதுத்தொண் டாற்ற
வித்திடும் தலைவர்க் கெல்லாம்
வேண்டுதல் ஒன் று கேட்பேன்:
'முத்திடும் கடல்சூழ் நாட்டின்
முதுதமிழ் மொழிகாப் பீரே!'

'தமிழ்நலம் காத்தல் ஒன்றே
தமிழினம் காத்தற் கொப்பாம்!
கமழ்தரும் தமிழ்ந லத்தைக்
கலப்பினால் கெடுப்பீ ராயின்
உமிழ்தகு நிலைவந் தெய்தும்!
உயிர்,மொழி; இனம்,மெய் யன்றோ?
அமிழ்வது மொழிமுன் என்றால்
அழிவுறும் இனம்,நா டென்பீர்'

சுவடி 15
ஓலை: 2.
விலை:
உருபா. 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரைகளாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:595: தென்மொழி காக்குந் தூய தமிழ்ப் பா(மா)மணியே, இனிய வணக்கம். கலைமலியுந் தலைநகரில், கடந்த உரிமைத் திருநாளன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாங்களுங் கலந்து கொண்டு தமிழ் முழக்கஞ் செய்தீர்கள்—என்பதை நாளிதழ் வழி அறிந்து மகிழ்ந்தேன். அம்மாநாடு, குறிப்பிட்ட ஓர் அரசியற்கட்சியாற் கூட்டப்பட்ட தெனினும், இனிய தமிழுந் தமிழ்நெறியும் யாண்டுந் தனியுரிமையோச்சக், கட்சிகளுக்கப் பாற்பட்டுத் தமிழ்க்குருதியில் கலந்துவிட்ட, உண்மைத் தமிழுணர்வாலும், பற்றாலும் பிற அரசியலாளர்களினுந் ‘தென்மொழி’ச் சார்பில் கலந்துகொண்ட தாங்களே, முழுமையான எதிர்ப்பைக் காட்டியிருக்கிறீர்கள், மொழிப்போரில் அமைக்கப்படுங் களத்தில் எந்தவோர் அரசியற்சார்புமின்றி முன்னணியில் நின்று, செந்தமிழ் காக்கத் தாங்கள் என்றுந் தயங்கியதில்லை. குழப்பஞ் செய்வோரெல்லாம் முழக்கஞ் செய்பவராகக் கருதப் படும் இக்காலத்தில், எண்ணம், சொல், செயல் ஆகிய மூவழியிலும் தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவ, ஓல்லாங்கு தொண்டாற்றுந் தாங்கள், உலகத்தமிழர் பாராட்டிற்குரியவர்.

அவையிலே கூவி, அனைவரது பாராட்டைப் பெற்றால்தான் குயிலுக்குப் பெருமை என்பதில்லை. அஃதொப்பப் பிறர் பாராட்ட வேண்டும் என்பதற்காக இந்தி எதிர்ப்பில் ஈடுபடுவதில்லை. இந்தி எதிர்ப்பு என்பது அரசியலாளர்க்குப் புதிதாக இருக்கலாம், விளம்பரக் கருவியாகப் பயன்படலாம். தற்பெருமை பேச இடந்தரலாம். ஆனால், ‘தென்மொழி’க்கோ, இந்தி எதிர்ப்பு, ஒரு நெடுங்காலத் தன்மானப் போராட்டம். இந்தி இங்கே எந்த வழியிலேனும் நுழைக்கப்படுமானால் அதனைக் கனன்று, கண்டிப்பதோடு களப்பலிக்கும் அணியமாய் இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்த்தம்பியர் பலருண்டு. அவர் நெஞ்சில் பழந்தமிழர் வீரமுண்டு. தங்களது தலைமையும், தனித்திறலுமுண்டு.

—பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

0:596: பேரன்பின் ஐயா அவர்களுக்குத் தமிழப்பன் விடுக்கும் அன்புமடல். நலம், நலமே சூழ்க. ‘மதுரைப்’ பல்கலைக் கழகத்தைக் ‘காமராசர்’ என்று பெயர் மாற்றம் செய்தது மிகமிக வருந்தத்தக்கது. தாங்கள் குறிப்பிட்டதுபோல் காமராசர் ஒரு கடமை மாமலையாக இருக்கலாம். தனக்கென வாழாத் தகைமையாளராக, மக்கள் தொண்டராக இருக்கலாம். ஆனால் தமிழ் மொழிக்காவலர் என்றோ, தமிழினத்தின் முழுமையான தலைவர் என்றோ தமிழுணர்ந்த தக்கார் ஏற்றுக் கொள்ளார். தமிழகத்தின் தலைமை அமைச்சராக இருந்திருக்கலாம். அக்கால் அவர்தம் கடமையாகச் செய்த ஒருசில நற்பணிகள் குறிப்பாக ‘கல்வி வளர்ச்சிப்பணிகள்’ பாராட்டத்தக்கன. ஆனால் அதற்காக ஒரு பல்கலைக்கழகத்தின் பெயரை ஏற்குமளவிற்குத் தகுதியுடையவரல்லர்.

—க. தமிழப்பன். திருப்பூர்,

0:597: மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய ஐயா, வணக்கம், முத்தரையர் பாளையத்தில் தாங்கள் நிகழ்த்திய செந்தமிழ்ப் பொழிவு,

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் நேரெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை : 2.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

கடகம்-மடங்கல் தி. பி. உ00௯-
சூலை, ஆகத்து-1978.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ.க.ம.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (*சிங்கை*)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (*தமிழ்நாடு*)

கலைக்கோயில் மாணிக்கம் (*சிங்கை*)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (*தமிழ்நாடு*)

அமைச்சர்: புலவர். அன்பு. செங்குன்றனார்;

அலுவலகப் பொறுப்பாளர்: அழ. இளமுருகன். அறி.இ.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்,
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

திராவிடர் கழகம் நடத்திய சென்னை இந்தியெதிர்ப்பு மாநாடும் நம் கருத்தும்.



கடந்த ஆகஃச்டு 15-ஆம் பக்கல் சென்னையில் ஓர் இந்தியெதிர்ப்பு மாநாடு, திராவிடர் கழகத்தின் சார்பில் நடத்தப்பெற்றது. அப்படியொரு மாநாட்டை நடத்தத் திட்டமிட்டதற்காகவும், அதனை வெற்றிபெற நடத்திக் காட்டியதற்காகவும் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் உயர்திரு கி. வீரமணி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவரின் பொதுத் தொண்டு வாழ்க்கையை இம்மாநாடு ஒருபடி உயர்த்திக் காட்டியது என்றே சொல்லலாம். தங்களுக்குள் கொள்கையளவில் எத்தனைக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வடநாட்டரசின் இந்தித் திணிப்புக் கொள்கைக்கு

எதிர்ப்புக் காட்டிய அளவில்; அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தையும் ஒரு முகப்படுத்தி; இப்படியொரு மாநாட்டை நடத்திக் காட்டியவழி, திரு. வீரமணி அவர்களுக்குள்ள ஆர்வமும் அக்கறையும் கொள்கைப் பிடிப்பும், அவரையும், அவரின் கடந்த கால முயற்சிகளையும் நன்கு அறிந்த நமக்கு வியப்புத் தருவதன்று. பெரியாருக்குப் பின் திராவிடர் கழகத்தின் அடிப்படை முயற்சிகள் பிறர் சிலர் எதிர் பார்த்தபடி சிதைந்து விடவில்லை என்பதற்கு இம்மாநாடே சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஆனால், நாம் மாநாட்டில் கூறியபடி, இத்தகைய மாநாடுகளால், திரு. வீரமணி அவர்கள் எதிர்பார்ப்பதைப் போலவோ, பிற கட்சிகளின் தலைவர்கள் விரும்புவதைப் போலவோ, ஓர் எள்ளின் மூக்கத் துணைப் பயனும் விளைந்துவிடப் போவதில்லை என்பதும், இதனால் செருக்கும், விடாப்பிடியின் முரட்டுக் குணமும், தமிழினத்தை என்றென்றும் அடிப்படுத்தியே வைத்திருக்க வேண்டும் என்னும் ஆணவ ஆளுமை அதிகார வெறியும் கொண்ட வடநாட்டு ஆரிய அரசினரின் பிடி தளர்ந்துவிடப் போவதில்லை என்பதும் நம் அசைக்க முடியாத கருத்துகள் ஆகும். இந்தியாவைப் பொறுத்த அளவில், எத்தனைக் கட்சிகள் தோன்றினாலும், எத்தகைய தலைவர்கள் ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் ஒட்டுமொத்தமான கருத்துகள் அனைத்தையும் கூட்டிப்பெருக்கிக் கழித்துப் பார்த்தால், அவற்றுக்கு அடித்தளங்களாக இருப்பவை இரண்டே இரண்டு கருத்துகள் தாம் என்பதை எவரும் தருக்க முறையாகக்கூட மறுத்துவிட முடியாது. அவை ஆரியச் சார்பான கருத்துகளும், திரவிடச் சார்பான கருத்துகளுமே ஆகும். இங்குள்ள அரசியல், பொருளியல், குமுகாயவியல், மொழி, பண்பாடு, கலை, கல்வி ஆகிய எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையில் இவ்விரு வகையான கருத்துகளே போட்டி போட்டுக் கொண்டு போராட்டங்களை நிகழ்த்தி வருவதைச் சற்று ஆழமாகப் பார்க்கும் எவரும் ஒப்புக் கொள்வர். நிலை இவ்வாறு கல்லின் எழுத்துப் போல் கனபருமான அளவில் வெளிப்படையாக இருக்க, இதனை வெறும் கருத்து அளவில் எதிர்த்துப் போராடிக் கொண்டிருப்பது நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதே ஆகும்.

கடந்த ஐம்பது அறுபது ஆண்டுக் காலமாக இடைவிடாமல், தந்தை பெரியார் அவர்களாலும்; அறிஞர் அண்ணா அவர்களாலும், மற்று தமிழறிஞர்கள் பலராலும் எதிர்க்கப்பட்டு வரும் இவ்விந்தித் திணிப்பு என்னும் முயற்சி நாளுக்கு நாள் மேலுக்கு மேல் இன்னும் வலுப்பெற்று வருவதை, திரு. வீரமணி போலும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்கு அறிவர். இனி, இவ்வகையில், அவ்வரும் பெருந் தலைவர்களை விடவும், அவ்வறிஞர்களை விடவும் நாம் வெறும் வாயளவில் போராடி வெற்றி பெற்றுவிட முடியும் என்பது, அவர்களின் பேராற்றலுக்கு ஒரு வகையில் இழுக்கும், நம் வரட்டு முயற்சிகளுக்குப் பல வகையில் இழிவும் ஏற்படுத்துவதாகும். எனவே தான், இம்முயற்சிகளுக்கெல்லாம் ஒரே விடிவு வீரமணி போலும் தலைவர்கள் சிலர் கைநழுவி விட்டுவிட்ட தனித்தமிழ் நாட்டுப் பிரிவினையை மீண்டும் உறுதிப் படுத்துவதும், அதைச் செயற்படுத்துவதில் நம் கருத்தைச் செலுத்த வேண்டுவதும் ஆகும் என்பதை நாம் அவ்விந்தி

எதிர்ப்பு மாநாட்டில் மிகவும் தெளிவாகவும் வலிவாகவும் எடுத்துக் கூறினோம். இதனைப் பிடிக்காத பலர் அக்கால் அம்மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்ததையும், நாம் கூறிய கருத்தால் முகஞ் சுழித்ததையும் நாம் நன்கு அறிவோம். ஆனாலும் நாம் கூறின கருத்து களுக்கு வேறான ஒரு மாற்றுக் கருத்தை நமக்குப் பின்னர் பேசிய தலைவர்களின் பேச்சிலோ, அம்மாநாட்டில் இறுதியில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களிலோ நாம் காண முடியவில்லை. வடநாட்டு இந்தி வெறியர்களுக்கும் ஆரிய அடிவருடிகளுக்கும் இவ்வெற்றுத் தீர் மானங்கள் எருமை மாடுகளின்மேல் தூறிய உமித்தூறலுக்கே ஒப் பானவை ஆகும். இவை போலும் ஆயிரக்கணக்கான தீர்மானங்கள் கடந்த காலக் கட்சிகளின் வரலாற்றுப் பொத்தகங்களில் நூற்றுக் கணக்கான பக்கங்களை அடைத்துக் கொண்டு கிடப்பதை அனைவரும் அறிவர்.

இனி, தமிழினத்தைப் பொறுத்த அளவில் அதன் முன்னேற்றத் திற்காக நாம் செய்யும் முயற்சிகள் அனைத்தும் இம்மாநிலத்தின் எல்லைக் கோடுகளைத் தாண்டி வெளியே போவதே இல்லை. இங்குள்ள பார்ப் பனர்கள் அதைத் தம் முதல் முயற்சியாகவும் முழு முனைப்பாகவும் செய்து கொண்டு வருகின்றனர் என்பது அனைவர்க்கும் தெரியாத ஒன்றன்று. அவர்கள் செய்யும் செயல் ஒரு துளியாக இருந்தாலும் அதைக் கடலளவாகப் பெருக்கிப் காட்டுவதும், நாம் செய்யும் முயற்சிகள் மலையளவாக இருந்தாலும் அஃதை ஒரு முளையளவாகச் சுருக்கிக் காட்டுவதும் அவர்களின் இனத்திற்கே இயல்பாக உள்ள ஒருவகைக் கரவான சூழ்ச்சியாகும். கடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும், பார்ப்பன இதழ்கள் நம் செய்திகளை வெளியிடுவதில்லை என்ற குறை சுட்டிக் காட்டப் பெற்றது. அந்நிலை ஒன்றும் புதிதானதோ, வியப்பானதோ இல்லை; அஃது அவர்களின் இயல்பு. ஆனால் நம் செய்திகளை நாமே நமக்கிருக்கும் ஓரிரண்டு மாநில அளவான செய்தித் தாள்களிலும்கூட வெளியிடுவதில்லையே, இஃது எதைக் காட்டுகிறது. (குறிப்பாக நாம் பேசிய பேச்சு மட்டும் மாநாட்டை முன்னின்று நடத்திய திரு. வீரமணி அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்தும் செய்தித்தாளாகிய விடுதலையிலும், கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்தும் செய்தித்தாளாகிய முரசொலியிலும் வெளியிடப் பெறவே இல்லை. அந்நிலை எதைக் காட்டுகிறதோ நாம் அறியோம்.) ஆனால், ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. பார்ப்பனர்கள் தமிழர்கள் அனைவரையும் சூத்திரர்கள், இழிந்த மக்கள் என்று நாலாந்தர இனமாகத் தாழ்த்தி வைத்திருப்பதைப் போலவே, அவர்களும் அவர் களுள் ஒரு சிலரைப் பஞ்சமர்கள், தாழ்ந்த மக்கள் என்று ஐந்தாந்தர இனமாக வீழ்த்தி வைத்திருக்கின்றனர் அல்லரோ? அது போலவே தமிழர்கள் வெளியிடும் மிகச்சிறிய செய்தித் தாள்களிலும் வெளியிடப் பெறாத வகையில், 'ஒதுக்கி வைக்கப் பெற்றிருக்கும் சிலர்' என்று இவ் விதழ்களை நடத்துவோர் பட்டியல் போட்டு வைத்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.

இவ்விடத்தில் அவர்களுக்கு நாம் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறோம். கட்சி சார்ந்த அரசியல்காரர்களின் கருத்துகள் மட்டுமே மக்களுக்குத் தேவையானவை அல்ல; கட்சி சாராதநடு நிலையாளர்-

களின் கருத்துகளும் என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். தாம் கட்சித் தலைவராக இருப்பதாலும், தம் கையில் மக்கள் கொடுத்த பணத்தில் ஏதோ ஒரு தாளைத் தொடங்கிக் கொள்ள முடிந்தது என்பதாலும், தம் பேச்சை மட்டும், அல்லது தாம் விரும்பும் ஒருவர் பேசாத(!) பேச்சைக்கூட, முகாமைப் படுத்தி முழுமையும் ஓர் எழுத்து விடாமல் (அப்பேச்சில் சாரம் இருக்கிறதோ இல்லையோ என்பது பற்றிக் கவலைப் படாமல்) போடச் செய்வதும், தாம் விரும்பாத பிறர் பேச்சை அரைகுறையாகப் போடச் செய்வதும், அல்லது போடாமலே மூடிமறைக்கச் செய்து விடுவதும் செய்தித் தாளுக்குரிய இலக்கணமுமன்று; மக்கள் தலைவர்களுக்குரிய கடமையுமன்று. மக்கள் நலனுக்காகவே நாம் கட்சி நடத்துவதோ, அரசியல் செய்வதோ உண்மையானால், மக்களுக்குத் தேவையான— உண்மையான கருத்துகள் பரப்பப் படுவதிலேயே அவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். மக்களுக்குத் தேவையான உண்மைக் கருத்துகளை—அவை எவர் கருத்துகளாக இருந்தாலும், (அவை தேவையற்ற கருத்துகளாக இருந்தால் தவிர) அவற்றை இருட்டடிப்புச் செய்யும் நோக்கம் மக்கள் முன்னேற்றத்தைப் பின்தங்கச் செய்து விடும். தமிழினத்திற்கு வேண்டிய கருத்துகளைத் தமிழர் நடத்தும் செய்தித்தாள்களில் இருட்டடிப்புச் செய்யும் கீழ்மைச் செயல்கள் ஓர் இனத்திற்குச் செய்யும் உள்ளழிவு முயற்சிகளே ஆகும். கருத்தை எவர் சொன்னாலும் அது மக்களுக்குத் தேவையா தேவையில்லையா என்பதையே மக்கள் நலம் கருதுவோர் கவனிக்க வேண்டுமேயல்லாமல், அஃது யாரால் சொல்லப்பட்ட கருத்து—என்று பார்ப்பதும், தமக்குச் சார்பாகச் சொல்லப்பட்டதா, இல்லையா என்று பார்த்து வெளியிடச் சொல்வதும், நடுநிலையான கொள்கையும்—உண்மையிலேயே—மக்களுக்கு நலஞ்செய்யும் கருத்தும் உடைய ஒருவரின் நடைமுறையும் ஆகா. ஒரு கட்சியிலிருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப் பெற்ற தொண்டர் பலரும், கடந்த காலங்களில், தம் கட்சித் தலைவர்மேல் சாட்டப்பெற்ற குற்றச் சாட்டுகளில் இதுவும் ஒன்றாக இருந்தது என்பதை நடுநிலையாளர்கள் கருத்தில் கொள்க. ஆனாலும், எப்படியோ இக்குற்றம் இன்றுள்ள பெரும்பாலான கட்சித் தலைவர்களிடமும் ஒரு சிறு ஏற்றத் தாழ்வான அளவுகளில் இருந்தே தீர்கிறது. என் செய்யலாம். அவர்கள் உடல் குருதியில் ஊறிய இக் குற்றம் அரசியலுக்கே பொதுவான தகுதியில் சேர்க்கப் படுவதொன்றோ, நாமறியோம். இவ்வகையில் தலையாய விளம்பரக் கருவிகளாகிய செய்தித்தாள்களைப் பெற்றவர்கள் அறிஞர்களையும் மடயர்களாக்கிக் காட்டலாம்; மடயர்களையும் அறிஞர்களாக மாற்றலாம்.

இனி, இந்தியெதிர்ப்பு மாநாட்டில் திராவிடர் கழகத்தின் சார்பில் முன்னணிப் பேச்சாளர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டு பேசிய சிலர், இந்தியை எதிர்த்துப் பேசும் நோக்கத்தில் மட்டுமின்றித், தமிழைத் தாழ்த்திப் பேசும் நோக்கத்துடனும், ஆங்கில மொழியையே அளவிறந்து பாராட்டிப் பேசியது குறிப்பிடத்தக்கது. இது சட்டிக்குத் தப்பி நெருப்பில் விழுந்த கதையைப் போன்றதாகும். ஆங்கிலம் தேவை என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், தமிழ் தேவையில்லை என்கின்ற அளவுக்கு ஆங்கில வேட்கை தி.க. வினர்க்கு இருக்கும் நிலையை நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தம் கட்சி

அமைத்த மேடையென்பதால், அங்கு அமர்ந்திருந்த தமிழ்க்கொள்கையாளர்களின் மனம் துணுக்குறும் அளவுக்குப் பேசிய அவ் வாய் நீளக்காரர்களின் அறிவு நிலை பற்றி நமக்கு நன்கு தெரியும்.

முதற்கண், 'தமிழ்' இல்லாமல் 'தமிழர்கள்' இல்லை என்பதை அவ் 'விடுதலை'யாளர்கள் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆங்கில எழுத்தே எப்படி ஆங்கிலம் ஆகாதோ, அப்படியே தமிழ் எழுத்தே தமிழாகாது. இனி, ஆங்கில எழுத்தறிவே எப்படி ஆங்கில அறிவாகாதோ, அப்படியே தமிழ் எழுத்தறிவே தமிழறிவு ஆகிவிடாது. தமிழைப் பிழையின்றி ஒரு பக்கமோ ஒரு வரியோதானும் எழுதத் தெரியாத-பேசத் தெரியாத அவர்கள், தமிழினத்தை முன்னேற்றி விடுவோம் என்று வாயடிப்பது, குப்பையேறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன், வானம் ஏறி வைகுண்டம் காட்டுவேன் என்னும் 'புராணப்' புரட்டாகும். வேண்டுமானால் இதைப் 'பகுத்தறிவுப்' புரட்டென்று நாகரிகமாகக் கூறலாமேயொழிய, தமக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழறிவைக் கொண்டே தமிழைப் பழிப்பதை எவரும் அறிவென்று உதடு பிதுங்கிக் கூறிவிட ஒப்பார். மேலும் தமிழ்மொழி இவர்களின் பகுத்தறிவுக் கொள்கைக்கு மாறானதென்பது இவர்கள் கருத்தா என்பது தெரியவில்லை. 'விடுதலை'யும் கருப்புச் சட்டைத் தமிழர்களும்; தமிழினத்தைப் பற்றி அக்கறை கொள்ளுமளவுக்குத் தமிழைப் பற்றி அக்கறை கொள்ளாதது ஏன் என்பதும் நமக்கு விளங்கவில்லை. ஆரியத்தை எதிர்ப்போர் ஆரிய மொழியை விடாப்பிடியாகக் கையாள்வதன் பொருள் என்ன? பார்ப்பனர்கள் சமசுக்கிருதத்திற்கு வெளிப்படையாக ஆதரவு தருவதுபோல், 'விடுதலை' அதற்கு மறைமுகமாக ஆதரவு தருகிறது என்பதுதானே பொருள். பெரியாரின் முன்னுளைய தமிழ்க் கொள்கை இதுவாக இல்லை என்பதை மறுக்க முடியாத சான்றுகளுடன் முன்பே தென்மொழியில் வெளியிட்டுள்ளோம். ஒரு மொழியில் புகுத்தப்பெற்ற கருத்துகளுக்காக அம்மொழியையே இவர்கள் வெறுப்பது எப்படி அறிவுடைமையாகும்? தமிழைக் கெடுக்கும் நோக்கத்துடனேயே வேத புராண இதிகாசக் கருத்துகளை, ஆரியர்கள் அதில் புகுத்தினர். தமிழைக் கலப்பு மொழியாக்கி தி.க.வினர் கெடுப்பது; அதைப் போன்று இல்லாவிடினு, அவர்கள் தமிழைக் கெடுக்கப் பயன்படுத்திய கலப்பு முறையையே தாமும் பயன்படுத்தி அதனை மேலும் மேலும் கெடுக்க முற்படலாமா? இதில் தன்மான உணர்வு சரியாகச் செயல்படுவதாகச் சொல்ல முடியுமா?

தி.க. வினரின் ஆங்கில வேட்கையோ, இந்தியெதிர்ப்பு உணர்ச்சியோ தமிழ் மொழியைத் தாழ்த்தும் அளவுக்கு அல்லது இழிக்கும் அளவுக்கு நீளுவதை எவரும் ஒப்புக் கொள்ள முடியாது. தமிழர் தாய்மொழிப் பற்றில்லாவிடில் இனப்பற்றில் வளர்ச்சி எய்த முடியவே முடியாது. அதுபோலவே, இந்தியெதிர்ப்புணர்ச்சி கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேம்பட்ட முயற்சியாக இருந்து வந்தாலும், பெரியார், அண்ணா போலும் தலை சிறந்த தமிழினத் தலைவர்களால் நடத்திக் காட்டப் பெற்றாலும், அக்கொள்கை வெற்றி பெறாமற் போவதற்கும், இன்றுவரை அம்முயற்சி நீடிப்பதற்கும் தமிழர் இந்தியுணர்வை முறியடிக்கும் அல்லது தவிர்த்தொதுக்கும் அளவிற்குத்

தம் தாய்மொழிப் பற்றுக் கொள்ளாததே தலைசிறந்த காரணியம் என்பதை தி.க. வினரோ, பிறகட்சித் தலைவர்களோ மறந்துவிடக் கூடாது.

அடுத்து, திராவிடர் கழகத்தினர் இன்னொன்றையும் நினைவுகூர வேண்டிக் கொள்கின்றோம். அவர்கள் பகுத்தறிவுக் கொள்கைகளுள் ஒன்றாகக் கொண்டிருக்கும் இறை மறுப்புக் கொள்கையைப் பற்றியும் சில விளக்கங்களைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். முதலில், இறைக் கொள்கை ஆரியக் கொள்கையன்று. தமிழரின் தலைசிறந்த மெய்ப்பொருட் கொள்கையே அது என்பதை உணர்தல் வேண்டும். அக்கொள்கையைத் தமிழின வளர்ச்சி நிலைகளுக்கு எவ்வகையாலும் தொடர்புபடுத்தும் முயற்சியைச் செய்தல் கூடாது. இறை நம்பிக்கையை அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்கே விட்டு விடுதல் வேண்டும். தமிழின முன்னேற்றத்திற்குத் தடையாக விருப்பது ஆரியரின் பொய்யும் புளுகும் நிறைந்த வேதமதக் கொள்கையே யன்றித் தமிழரின் இறைக் கொள்கையன்று. எனவே, மட்டையடியாக, உயரின மாந்தரின் உள்ளுணர்வையே திரிபடையச் செய்யும் இறைமறுப்புக் கொள்கையைத் தமிழின முன்னேற்றத்திற்குத் தேவையான பொதுக் கொள்கையாக அறிவித்தல் கூடாது. எப்படி, அவரவர் அரசியல் கொள்கைகளை அவரவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு விட்டுவிட்டு, அவற்றைப் பற்றிய கருத்து வேறுபாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்தியெதிர்ப்பு நிலையில், அதைப் பிறர் மேல் திணிக்கின்ற முயற்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு போராடுவதில் ஒன்றுபடுகின்றோமோ, அதே முறையில், கடவுள் நம்பிக்கையையும் கடவுள் நம்பாமையையும் அவரவர் தனிப்பட்ட அறிவு ஆராய்ச்சி, மன விருப்ப நிலைகளுக்கும் கடைப்பிடிப்புகளுக்கும் விட்டுவிட்டு, அவற்றின் ஏற்றத்தாழ்வுகளைப் பெரிது படுத்தாமல், ஆரிய எதிர்ப்பு நிலையிலும், வேதமதக் கொள்கை மறுப்பு நிலையிலும், ஒன்றிணைந்து செயல்படும் முறையே, தமிழர் முன்னேற்றத்திற்கும், தமிழினப் பாதுகாப்புக்கும் நன்மை தரும் கொள்கையாகும், என்பதை நன்கு எண்ணி உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். தமிழர்கள் அனைவரையும் இறைமறுப்புக் காரர்களாக மாற்றும் முயற்சி, தமிழினத்தை என்றென்றைக்கும் ஒற்றுமைப் படுத்தப் பயன்படாது என்பதைத் தி.க. அன்பர்கள் திட்டவட்டமாகத் தெளிந்தறிதல் வேண்டும். கடவுளைப் பற்றிய கொள்கையை, எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும், எந்தத் தலைவரோ, கட்சியோ தம் இனமுன்னேற்ற முயற்சியில் இணைத்ததில்லை என்பதை வரலாறு அறிந்த எவரும் எளிதில் உணர்வர்.

இறைக்கொள்கை ஆரியக் கொள்கையும், இறை மறுப்புக் கொள்கை தமிழர் கொள்கையும் என்று பொருள்படும்படி அவர்கள் செயல்படுவது தமிழரை மேலும் மேலும் ஆரிய வேதக் கொள்கைகளில் வேரூன்றிக் கெட்டுச் சீரழிவதற்கே வழி வகுப்பதாகும். தமிழினத்திற்குப் பெரியார் செய்த அரும்பெருந் தொண்டு என்றென்றும் மிகுந்த மதிப்புடன் போற்றி நினைவு கூறத்தக்கதாகும். ஆனால், அவரின் இந்த ஒட்டு மொத்த முயற்சிக்கும் அதன் வெற்றிற்கும் அவரின் ஆரிய எதிர்ப்பே காரணியமாகுமேயன்றி, அவரின் இறை

மறுப்புக் கொள்கை கரணியமாகாது என்பதைத் தி.க.வினர் நன்றாக எண்ணிப் பார்த்துத் தெளிதல் வேண்டும். இறைமறுப்புக் கொள்கை ஆரிய எதிர்ப்புக் கொள்கையில் அடங்குவதாகும் என்று மக்கள் பொருள் செய்து கொள்ளும்படி, அவர்கள் கருத்துகளைப் பரப்பி வருவதால்தான், தங்கள் தங்கள் அறிவுணர்வுக்கோ மனவுணர்வுக்கோ வாழ்வியலுணர்வுக்கோ சரியென்று பட்டவகையில், இறை நம்பிக்கை கொண்ட தமிழர்கள், 'ஆரிய எதிர்ப்பே தவறு' என்று, இனமுன்னேற்ற முயற்சியென்னும் பணியில் சேராமல் தங்களை ஒதுக்கிக் கொண்டு போகும்படி ஆகிவிட்டது. இவ்வாறு ஒதுங்கிப் போகும் ஓர் இனத்தின் பெரும்பாலான மக்களை விட்டுவிட்டு, முழுமையாக ஓர் இன முன்னேற்றத்தை எப்படிச் செய்துவிட முடியும் என்று எதிர்பார்க்கலாம். இது தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு நிலையாவது மட்டுமன்றித் தம்மைச் சார்ந்தவர்களையும் ஏமாற்றும் ஒரு குமுகாயக் குற்றமேயாகும். மக்கள், கூட்டங் கூட்டமாகக் கூடிக் கேட்பதாலேயே ஒருவர் கொள்கை முற்றும் அறிவு சார்ந்தது என்றோ, அவர் சரியான பாதையில்தான் செல்கிறார் என்றோ நினைத்துச் சில தவறான மக்கள் வழிகாட்டிகள் மேலும் மேலும் தவறுகளையே செய்வதற்கு உறுதிகொண்டு விடுகிறார்கள். எனவே, அவர்கள் திருந்துவதற்கே வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. இதுவும் ஒருவகைப் பகுத்தறிவின்மையே!

மேலும் இறை நம்பிக்கையென்பது மாந்தர்களிடம் உள்ள 'அடங்காமை' உணர்வை நெறிப்படுத்தி, உலக அமைவாக்கங்களில் ஈடுபடுத்தும் ஓர் உயர்ந்த மெய்யுணர்வேயாகும். அது, மாந்த இனம் முழுமைக்கும் அவரவர்களின் மனவுணர்வு, அறிவுணர்வு, வாழ்வியலின் அகப்புற முனைப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து வளர்வதும் வளராது நிற்பதுமாகிய ஓர் இயற்கை உணர்வே யாகும். எந்த இயற்கை நல்லுணர்விலும்போல், இதிலுமுள்ள தவறான போக்குகளும் கீழ்மையுணர்வுகளும் மூட நம்பிக்கைகளுமே கடிய வேண்டுவனவாகுமேயன்றி, இவ்வுணர்வே கடியவேண்டிய உணர்வாகாது. ஒருவன் தன் தலைமைக் கடங்கும் உணர்வும், தலைமையை வணங்கும் ஓர் உணர்வும் கூட ஒருவகை இறை நம்பிக்கையே! அவ்வுணர்வின் படிநிலை வளர்ச்சியில், நாம் கொண்ட அல்லது நமக்குப்பட்ட ஒரு நிலையையே சரியென்றும் அறிவு என்றும் ஒப்புக் கொள்வதும், பிறர் கருத்துகளை அடியோடு பிழை என்றும் அறியாமை என்றும் புறக்கணிப்பதும், அறிவுக் கொள்கையையே இழிவு படுத்துவதாகும். இறை நப்பிக்கை யுள்ளவர்கள் எல்லாருமே மூடர்களும் அல்லர்; இறை நம்பிக்கை யற்றவர்கள் எல்லாருமே அறிவுடையவர்களும் அல்லர். வெறும் தருக்க முறையாகப் பார்த்தாலும் இக்கொள்கை தவறானது என்று சிறிதே அறிவுணர்வுள்ளவர்களும ஒப்புக்கொள்வர். அவ்வாறிருக்க, கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவருமே முட்டாள்கள் என்று பொருள்படும் நிலையில், தி.க.வினர் தங்கள் தமிழின முன்னேற்றக் கொள்கையைத் தேர்ந்தெடுத்திருப்பதும், அதையே தமிழர்கள் அனைவரிடமும் திணிக்க முற்படுவதும், வடவரின் இந்தித்திணிப்பு போன்ற ஒரு கொடுமை முயற்சியே யாகும்.

மிகவும் வருந்துகிறோம் !

நெடுநாளைய தென்மொழி அன்பரும், தொடக்கக் காலத்தி லிருந்தே அதன் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட தென்மொழிப் புரப்பாளரும், முன்னாள் தென்மொழி உறுப்பாசிரியர் பேரா. உயர்திரு. ம. இலெ. தங்கப்பா அவர்களின் அருமைத் தந்தையாரும் ஆகிய புலவர். மதன பாண்டியன் அவர்கள் தொடர்ந்து உடல்நலங்குன்றியிருந்து கடந்த 19-8-78 காரி காலை 9 மணியளவில், நெல்லை மாவட்டம். குறும்பலாப் பேரியில் இயற்கை யெய்தினர் என்னும் செய்தியை. மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் அன்னார் பிரிவுக்கு வருந்தும் அவர் குடும்பத்தார்க்கும் உறவினர் நண்பர்களுக்கும் நம் உள்ளத்தெழும் ஆற்றா இரங்கலை அன்புடன் கூறிக் கொள்கிறோம்.

—பொறுப்பாசிரியர்.

---

o தனித்தமிழ் இயக்க வரலாற்றின் முதல் நூல்!

o தென்மொழி க. தமிழமல்லனின் அரிய முயற்சி!

o பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அணிந்துரைப் பாவுடன்

வெளிவந்துவிட்டது.

தனித்தமிழ்.

விலை உருபா: 4-00 பக்கங்கள்: 134.

அஞ்சற் செலவு தனி. விற்பனையாளர்களுக்குக் கழிவு 25%

கிடைக்குமிடங்கள்.

பொ. கண்ணையன்
168. மாரியம்மன் கோயில் தெரு,
தட்டாஞ்சாவடி. புதுவை-9.

o சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்.
79. பிரகாசம் சாலை. சென்னை-1.

o தென்மொழி பொத்தக விற்பனையகம், சென்னை-5.

பிழைக்கு வருந்துகிறோம்!

தென்மொழி, சுவடி 14, ஓலை 8-9-ஆம் இதழில் வந்த திரு. க.ப. அறவாணன் அவர்களின் ‘பனிமலையின் நெற்றியில் திராவிடர்’ என்ற கட்டுரையே, மீண்டும் சுவடி 15 ஓலை 1-இல், ‘பண்டைத் தமிழ் நாட்டின் வட எல்லை வேங்கடமன்று’ என்னுந் தலைப்பில் அச்சாகியுள்ளது. கவனக்குறைவால் ஏற்பட்ட இப்பிழைக்கு மிகவும் வருந்துகிறோம்.

திருத்திப் படிக்க

இவ்விதழில் வெளிவந்த நூறாசிரியம் 40-ஆம் பாட்டின் முதலடி முதற் சொல்லைக் ‘குடுமித் தேங்காய்’ எனத் திருத்திப் படிக்க.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: ௪௰

குடிமித் தேங்காய் துருவிப் பிழிந்த
கடும்பால் சுவையின் நலந்தரு தீம்பால்
முதிரமுதிர முகங்கெடப் புளிக்குந்
துதைசொற் பூரியர் தோன்று நட்பிற்
கஞ்சுவல் யாமே நெஞ்சுதளை யவிழ்ந்து
மஞ்சமை குன்றத்து மலர்வாய் குடைந்து
துமிதுமி ஈண்டிய மூரித் தேறல்
தமிழ்பெறக் கெழீஇய தகையோர் தொடர்போல்
முற்ற முற்றச் சுவைமூ வாதே!
ஆகலின்,
உணர்வின் தூவிய லுரவோர்க்கு
இணைவுற நடநீ நெஞ்சுபல் யாண்டே!

பொழிப்புரை:

மட்டையுரித்துக் குடுமியிட்டுலர்ந்த தேங்காயைப் பூத்துருவிப் பிழியக் கிடைத்ததும், கன்றீன்ற ஆவின் சீம்பாலினும் சுவையும் நலமும் தருவதும் ஆகிய இனிய தேங்காய்ப் பால், பொழுது கழியக் கழிய, முகம் நெருங்கி மோத்தற்கும் இயையாவாறு புளிப்பு மிகும் தன்மையின், நெருங்கி நின்று சுவை துளும்பிய சொல்லாடி மகிழ்வூட்டியிருந்து, காலஞ்செல்லச் செல்ல, முகமும் எதிர்ப்பட விரும்பாத நிலையில் மனம் புளித்துப் போகின்ற கீழ்மை யுணர்வு நிரம்பியவர்களின் தோன்றக் கூடாத நட்பிற்கு, யாம் அஞ்சுகின்றேம். குளிர்ந்த நீர்த்துளி நிரம்பிய மெல்லிய வெண்மேகம் வந்து அமைகின்ற குன்றத்தில் பூத்துக் கிடக்கும் மலர்களின் வாய்களைக் குடைந்து, துளி துளியாகத் திரட்டிய செந்நிறம் பாய்ந்த தேன், இனிமை சேரும்படி நெஞ்சின் கட்டுகளை யவிழ்த்துக் கொண்டு, உரிமை பாராட்டிப் பழகும் மேம்பாடுற்றவர் தொடர்புபோல், நாட்செல்லச் செல்ல மேலும் மேலும் சுவை மிகுமேயல்லது திரிந்து வேறுபடாது; ஆகலின், உள்ளத்தின் அளவாக வெளிப்படும் உணர்வினது தூய்மை இயல்புடைய அறிவு நலஞ்சான்றவர்க்குப் பொருந்திய தொடர்பாளனாகும்படி ஏ! நெஞ்சே!

நீ பல ஆண்டுகளாயினும், நெடுந்தொலைவாயினும் நடந்து அங்காந்து தேடிச் செல்வாயாக!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

புறத்தே நெருங்கி நின்று சுவையான சொற்களைப் பேசி, அகத்தே பொருந்தாத நட்புசெய்து, காலத்தே முகமும் பொருந்தாமல் விலகியிருக்கும் கீழ்மை நெஞ்சினர் தம் தொடர்பால் நோவுற்ற ஒருவன், நெஞ்சின் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு, உள்ளத்தினளவாக வெளிப் போந்த இயல்பான உணர்வுடன் நட்புச் செய்யும் கசடு நீங்கிய உயர்ந்த அறிவினர் தம் இணைவுக்குப் பொருந்தத் துடிக்கும் தன் நன்னெஞ்சிற்கு "அவ்வாறு அருமை வாய்ந்தோரைத் தேடிப் போகும் முயற்சியில் எத்துணைக் காலமும் இடமும் கடப்பதற்கு நீ அஞ்சாதே; ஊக்கமுடன் மேன்மேற் செல்" என்று கட்டளையிடுவதாக அமைந்ததிப் பாட்டு.

தொடக்கக் காலத்தே மிகவும் சுவைபடப் பேசிப் பழகியிருக்கும் கீழ்மை நெஞ்சினர், காலத்தே தம் தன்மையில் மாறிப்போதற்கு, புதியதில் மிகுசுவையும், நலனும் அளிக்கும் தேங்காய்ப் பால் மிக விரைந்து புளித்தும், தீதாகவும் போகும் தன்மையும், இணையும் புதுத் தொடர்பில் இனியராயிருந்து, காலம் கழியக் கழிய மேலும் நலமும் சுவையும் வாய்ந்தோராய் விளங்கும் தூயமனமும், அறிவுநலமும் வாய்ந்தார் நட்புக்கு, தொடக்கத்தில் நறுஞ்சுவை பயப்பதுவாக விருப்பதோடமையாது, எவ்வளவு காலஞ் செல்லினும் சுவையினும் நலத்தினும் மேன்மேலும் மிகுவதல்லது மாறுபாடும் வேறுபாடும் உறாத தேனின் தன்மையும் உவமைகளாகக் கூறப்பெற்றன.

குடுமித் தேங்காய்: குடுமிவிட்டு உரித்த தேங்காய், விட்ட குடுமியைச் சிறப்பித்தலால், உரித்த கால முதிர்ச்சி தெரிவிக்கப் பெற்றது. மட்டை உரிக்கப் பெற்று, நன்கு உலர்ந்து முற்றிப் பால் பிழியும் பக்குவம் பெற்ற தேங்காய் என்க.

துருவிப் பிழிதல்: தேங்காயைப் பூத்துருவிப் பிழிந்து பாலெடுத்தல்.

கடும்பால்: ஆவின் ஈன்றணிமைப் பால், சீம்பால்.

கடும்பால்.........தீம்பால்: சீம்பாலை விடச் சுவையும் நலமும் தருகின்ற தேங்காய்ப்பால்.

முதிர முதிர: (பிழியப்பெற்ற பால்) காலமுதிர்ச்சி தோன்றத் தோன்ற.

முகங் கெடப் புளிக்கும்: வாயால் பருகுதற்கு அருகில் சென்ற முகம் தன் தன்மையிற் கெடும்படி புளிப்பும், நெடியும் வீசும்.

துதைசொல் பூரியர்: மிக நெருக்கமாகி நின்று உரைக்கும் சொற்களையுடைய கீழ்மைக் குணமுடையவர். பூரித்தல்—மிகுதல். பூரியர் உலகியல் உணர்வான் மிகுந்து தோன்றும் பொதுக் குண மாந்தர்.

தோன்றா நட்பு: தோன்ற வேண்டாத நட்பு.

அஞ்சுவல் யாமே: முற்காலங்களில் அவ்வாறு விரும்பத்தகா தவர் நட்பு ஏற்பட்டதற்கும் இனி ஏற்படுவதற்கும் யாம் அஞ்சுகின்றேம்.

மஞ்சமை குன்றத்து: சிறு அளவில் நீர்த்துளி நிரம்பிய மென் மேகம், பொருந்துகின்ற குன்றத்தில்.

மலர்வாய் குடைந்து: மலர்களின் இதழ்களை விலக்கி உட்புகுந்து;

துமி துமி ஈண்டிய: துளி துளியாகச் சேர்க்கப் பெற்ற.

மூரித் தேறல்: முதிர்ந்து செந்நிறம் பாய்ந்த தேன்; முதிர்தலால் செந்நிறம் பாய்தல் இயல்பாயிற்று.

நெஞ்சுதளை யவிழ்ந்து: நெஞ்சின் அகப்புறக் கட்டுகள் நீங்கி,

தமிழ் பெற: இனிமை பெற.

கெழீஇய: உரிமை யுணர்வுடைய.

தகையோர்: பெருமைமிக்கோர்.

தொடர் போல்: இணைவுப் போல்; நட்புப்போல்.

முற்ற முற்ற: முதிர்ச்சியடைய அடைய.

சுவை மூவாது: சுவை தளராது; மூப்பு தளர்வைக் குறித்தது. 'நெஞ்சுதளை யவிழ்ந்து தமிழ்பெறக் கெழீஇய, தகையோர் தொடர் போல் முற்ற முற்றச் சுவை மூவாதே' என்று கூட்டுக.

நெஞ்சின் கட்டுகள் அவிழாவிடத்து உரிமை உணர்வு செலுத்தவும், செலுத்தியதை உணரவும் இயலா வென்க.

உணர்வின் தூவியல்: மனவுணர்வின் தூய்மையான இயற்கையாந் தன்மை; தூவியல்—தூய இயல்பு.

உரவோர்: அறிவுணர்வுடையோர். உரன்—அறிவுப் புலன்.

இணைவுற: தொடர்புறும்படி, உரவோர்பால் தொடர்பு நிகழுமாறு.

ஆகலின்: எனவே, (அத்தகையாரைத் தேடி)

நெஞ்சு, நீ பல் யாண்டு நட: முன் பூரியர் நட்பிற் கலந்து

கவன்று நின்ற நெஞ்சமே, உரவோரொடு பொருந்துவதன் பொருட்டு, நெடுங்காலமேனும் நெடுந்தொலைவேனும் சலிப்புறாது நடந்து கொண்டிரு என்பதாம்.

இப் பாட்டின் கண் பூரியர்க்குத் தேங்காயும், அவரிடத்துப் பெறும் நட்புக்குப் அதனின்று பிழிந்த பாலும் உவமைகளாகக் கூறப்பட்டன.

மட்டையை நீக்கிய பின்னரே பயன் படுத்துவதற்குரிய நிலையில் தேங்காயைப் பெறமுடிவது போல், பூரியர் தம் உலகியல் அழுத்தங்களை நீக்கிய பின்னரே, தொடர்பு கொள்வதற்குரிய தகுதியை அவரிடமிருந்து பெறமுடியும் என்க.

தேங்காயின் குடுமி, அவர் தம் ஆரவாரத்தைக் காட்டுவதாகும்.

தேங்காயின் வலிந்த ஓட்டை உடைத்து, முடிகளைத் துருவிப் பிழிந்து பாலெடுப்பது போல், அவரிடம் நெருங்கி அவர் மன வோட்டை உடைத்து உணர்வூட்டித் துருவி ஆராய்ந்து நட்பைப் பெறுவது கூறப் பெற்றது.

தொடக்கத்து அவர் நட்பினால் கிடைக்கும் நகை நலன்களுக்கும், சுவை நலன்களுக்கும், தேங்காயின் வெண் பருப்பும், சுவைநீரும் உவமைகளாம் என்க. காலக் குறுமையில் தோன்றும் அப்பயன் களும், அவரைப் பெற்ற புதிதில் கிடைப்பன போல்வனவாம் என்க.

தேங்காயை உடைக்கும் ஒலியில் பூரியரின் பொருந்திய சொல் லொலியும் நகையொலியும் வெளிப்பட்டு நிற்பதும் கண்டு மகிழ்க!

இனி, தகையோர் தொடர்புக்குத் துளி துளியாகத் திரட்டப் பெறும் தேனை உவமித்துக் கூறியது, அதன் கிடைத்தற்கரிய அருமை யும், சுவையும், முதிர்வு நலனும் உணர்த்துவான் வேண்டி யென்க.

தேன் பருகுதலல்லாது, சிறிது சிறிதாகச் சுவைக்கப் பெறுதல் போலும், பெரியோர் நட்பு ஒரேயடியாக நுகரப் பெறுதலல்லாது அவ்வக்கால் சுவைக்கப் பெறுதல் காண்க.

மெல்லிய வெண்மேகம் அமைந்த மலைச்சாரலின் கண் உள்ள நறிய பூக்களினின்று எடுக்கப்பெறும் தேன் என்றது, அவர் தூய மெய்ப் பொருள் சான்ற உயரிய வாய்மை நெஞ்சத்தையும், அந் நெஞ்சினிடத்து மலர்ந்து அன்பு கமழும் சொற்களையும், அவற்றி னின்று பெறும் அறிவுத் தேனையும் குறித்தல் வேண்டி என்க.

அவர் சொற்களினின்று அவ்வப்போது சிறிது சிறிதாக வெளிப் படும் அறிவு நலன்களை ஒருங்கு திரட்டி நலம்பெறுதல் துளி துளியாக ஈண்டிய முதிர்வுற்ற தேனினால் சுட்டப் பெற்றது என்க.

உலகத் தமிழ்க் கழக நான்காவது பொது மாநாட்டுத் தீர்மானங்கள்.

1. இருமொழித் திட்ட நிலை நிறுத்தத்திற்காகவும் ஒய்வுபெற்ற வறிய புலவர்க்கு உதவி செய்யும் திட்டத்திற்காகவும், பாவேந்தர் பாரதிதாசனாருக்கு விழா எடுத்தமைக்காகவும் இன்றைய அ. இ. அ. தி.மு.க. அரசை இம்மாநாடு மனமுவந்து பாராட்டுகிறது.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் விரைந்து சிறப்பாக நடைபெறும் பொருட்டு அதன் இயக்குநராகிய திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு ஒரு "தூதன்" (Ambassodor) இயங்கியும், ஒரு தொலைபேசியும், சம்பள உயர்த்தமும் அலுவலகப் பணி இடையூறுமல் நடப்பதற்கு ஒழுக்கல் இல்லாத தனிக் கூடமும், அலுவலக நூலகத்திற்கு இன்றியமையாத நூற்கள் வாங்குவதற்குத் தொகை ஒதுக்கீடும, தமிழிலக்கியச் சொல் தொகுத் தேர்ச்சிபெற்ற துணைப்பேராசிரியர் ஒருவரும், அச்சீட்டு வேலையைக் கவனிக்க பதிப்பாண்மை எழுத்துறவாளர் ஒருவரும், வெளிவேலை செய்ய இன்னும் ஓர் ஏவலரும உடனடியாக ஒதுக்கியும் அமர்த்தியும் உதவுமாறு தமிழக அரசை இம்மாநாடு வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறது.

3. இனிமேல் ஆங்கிலப்பட்டம் பெற்ற தமிழ்ப்புலவரையே தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கட்கெல்லாம் துணை வேந்தராக அமர்த்துமாறு அரசை இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

(முன்பக்கத் தொடர்ச்சி)

உரவோர் நட்பு உரிமைக்கும் கெழுதகைமைக்கும் இடனுயிருப்பதை மலர்வாய் குடைந்து ஈட்டிய மூரித்தேறல் என்பதனுன் உணர்க, வாய்குடைதல் என்னும் வினை அவர்பால், செலுத்தும் உரிமை உணர்வைக் குறித்ததென்க.

'தேங்காய்த் தீம்பால் முதிர முதிர முகங்கெடப் புளிக்கும் துதை சொற் பூரியர்' என்றவிடத்து, உவமேயத்தை உவமையால் விளக்கியும், 'மலர் வாய் குடைந்து, துமி துமி ஈண்டிய மூரித்தேறல் தகையோர் தொடர்போல் முற்ற முற்றச் சுவை மூவாது' என்றவிடத்து, உவமையை உவமேயத்தால் விளக்கியும் போந்தது' முன்னதின் உவமைக்கும் பின்னதின் உவமேயத்திற்கும் காட்டிய சிறப்பும் உயர்வும் என்க.

'நட நீ நெஞ்சு' என்றதில் உறுதியும் 'பல் யாண்டு' என்றதில் அருமையும், சோர்வுறுமையும் கூறப் பெற்றமை காண்க.

இது பொதுவியல் என் திணையும் பொருண்மொழிக் காஞ்சி என் துறையுமாம். 0

4. அண்மையில் செ.ப. கழகம் வெளியிட்டுள்ள உயர்திரு. பாலகிருட்டிண நாயரின் 'திராவிடத் தோற்ற ஆராய்ச்சி' நூல் உண்மைக்கு மாறுகவும், தமிழுக்குக் கேடாகவும் இருப்பதால் அதை உடனே புறக்கணித்துவிட்டு, பேராசிரியர் தங்கவேலனுர் எழுதியுள்ள தமிழ் நில வரலாற்றையே வெளியிட்டுப் பாடநூலாக்குமாறு இம் மாநாடு வேண்டுகிறது.

5. தொடக்க முதல் இறுதிவரை தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிவாயில் தெரிந்தெடுப்பை மாணவர்க்கு விட்டுவிடுமாறும், ஆங்கில வாயிற் கல்வியை இலவசமாக்குமாறும், ஆங்கில வாயில் வகுப்புப் புதுப்பிப்புகளை வேண்டிய அளவு தோற்றுவிக்குமாறும், தமிழ்வாயிற் கல்விக்குக் கலைக்குறியீடுகளைத் தனித்தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளுமாறும் அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

6 இடைக்காலத்தில் கலப்புத் தமிழில் மாற்றப்பட்ட தமிழ் நாட்டிலுள்ள ஊர்களின் பெயர்களைப் பழந்தமிழ்ப் பெயர்களாகவே புதுப்பிகுமாறு இம்மாநாடு அரசை வேண்டுகிறது.

7. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் வாழ்ந்த பல்லவ புரத்தில் அவர்க்கொரு படிமை நிறுவுமாறும், அவர் பிறந்த நாளில் விழாக் கொண்டாடுமாறும் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

8. திட்டமிடப்பட்டிருக்கும் முத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் திருச்சியில் அல்லது நெல்லை மாவட்டத்தில் நிறுவுமாறு அரசை இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

9. சென்னையிலுள்ள திருவள்ளுவர் கோட்டம்போன்று குமரி முனையிலும் திருவள்ளுவர்க்குப் பெருமைதரும் வகையில் திருவள்ளுவர் படிமையொன்று நிறுவி மணிமண்டபம் அமைக்குமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

10. இற்றைத் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்கும் தமிழர்கள் கட்சி கட்சியாகப் பிரிந்திருப்பது பெருந்தடையாக விருப்பதால் திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகமும் மீண்டும் ஒன்றுசேர்ந்து இயங்குமாறு இருகட்சித் தலைவர்களையும் இம்மாநாடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

11. இலங்கை இந்தியருள் பெரும்பான்மையர் தமிழராக விருப்பதால் தக்க தமிழர் ஒருவரையே இலங்கைத் தூதுவராக அமர்த்துமாறு நடுவணரசை இம்மாநாடு வேண்டுகிறது.

12. அண்மையில் இலங்கைத் தமிழர்க்கு நேர்ந்த கொடுமை களுக்காகவும், பேரிழப்புகளுக்காகவும் இம்மாநாடு வருத்தந்தெரி வித்துக்கொள்வதுடன், மேலும் அங்குள்ள தமிழர்களுக்கு இத்தகைய

இனக்கொடுமைகள் நேராவண்ணம் இலங்கையரசும் இந்திய அரசும் காப்பளிக்குமாறும், இவ்வகையில் குற்றஞ்சாட்டப்பட்டுப் பாது காவலில் வைக்கப் பெற்றிருக்கும் தமிழிளைஞர்களை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஈரரசுகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

13. தமிழரெல்லாம் தமிழ்ப் பெயரே தாங்குமாறு இம்மாநாடு வேண்டுகிறது.

14. சிங்கப்பூரில் தமிழ், ஆங்கிலம், சீனம், மலாய் ஆகிய நான்கையும் ஆட்சி மொழிகளாக்கி, அவற்றுள் ஆங்கிலத்தைப் பொதுமொழியாக்கிய லீ குவான் யூ விற்கு நெஞ்சார்ந்த பாராட்டை மகிழ்ச்சியுடன் இம்மாநாடு தெரிவிக்கின்றது.

15. இற்றைத் தமிழ்நாட்டு ஆளுநர் பிரபுதாசு பட்டுவாரி தமிழ்நாட்டில் தமிழுக்கு மாறுகச் சமற்கிருதத்தைப் பரப்பி வருவது தமிழர்க்கு வருத்தத்தை விளைவிப்பதால் அதை அடியோடு விட்டு விட்டு அவர் முன்னோருள் ஒருவரான கே. சே. சா. அவர்களைப் பின் பற்றித் தமிழ் கற்று நடுநிலையாக உண்மை கண்டு தெளியுமாறு அவரை இம்மாநாடு வேண்டுகிறது.

16. புதல்வர், புதல்வியர் அல்லது ஆண்மக்கள் பெண்மக்கள் என்னும் தூய தமிழ்ச் சொற்கள் இருக்கவும் அவற்றை விட்டுவிட்டு மகன்கள் மகள்கள் என்று இலக்கணப் பிழையில் கொச்சைச் சொற்களை ஆண்டு தமிழைக் கெடுத்துவரும் தினத்தந்தி எனனும் நாட்கம்பி ஆசிரியரை இம்மாநாடு கண்டிக்கிறது.

17. இந்தியக் கல்வி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் பொதுஉறவு மொழியாகவும் விடுதலை மொழியாகவும், ஒற்றுமை மொழியாகவும் கடந்த இருநூற்றாண்டு போல் இனியும் உலகுள் ளளவும் உதவுவதற்குத் தலைசிறந்த ஆங்கில மொழி இருப்பதால் அதையே நிலையான ஒரே இந்திய ஆட்சி மொழியாகத் தொடரச் செய்யவும், சொல் வளமும், இலக்கண வமைதியும் அறிவிலக்கியமும் இல்லாததும், இந்திய ஒற்றுமையைக் குலைத்துச் சின்ன பின்ன மாக்குவதுமான இந்தியை இந்தி மாநிலத்திற்குள்ளேயே அடக்கி வைக்கவும் தலைமை மந்திரியார் மொரார்சி தேசாயை இம்மாநாடு வேண்டுகிறது.

18. இந்தி தமிழ்நாட்டிற்குத் தேவையற்றதும், தமிழைக் கெடுப்பதுமாயுமிருப்பதால் தக்கண இந்திப் பரப்புச் சபையை உடனே தமிழ்நாட்டைவிட்டு நீக்குமாறு அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

19. தமிழ்நாட்டில் 1947-இல் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்திய நாவல் மணி (பாரத ரத்தினம்) சி. இராசகோபாலாச்சாரியாரே, பின்னர்த் தவற்றைபுணர்ந்து ஆங்கிலத்தையே நிலையான ஒரே இந்திய ஆட்சிப் பொது மொழியாக்க வேண்டுமென்று பறைசாற்றி, இந்தியை முற்றும் எதிர்த்து விட்டதனுல் அவர் தக்கண இந்திப் பரப்புரைச்சபை வெளியிட்ட இந்திக் கல்வி நூல் முதல் பதிப்புற்கு எழுதிய ஆங்கில முன்னுரையை அடுத்த பதிபபுகளிலும் தொடர்ந்து வெளிபிட்டு மக்களை ஏமாற்றி வரும் தீச்செயலை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

20 சிவனியமும் மாலியமும் அதாவது சைவம், வைணவம் என்னும் இரு மதங்களும் தமிழ் மதங்களாயிருப்பதால் அம்மதக் கோயில்களில் ஓதுவார், பண்டாரம், புலவர், குருக்கள், நம்பிமார், போற்றியார் முதலிய தமிழ்ப் பூசாரிகளையே வழிபாட்டிற்கு அமர்த்த வேண்டுமென்று இம்மாநாடு அரசை வன்மையாய் வேண்டுகின்றது.

21. தமிழ்ப் புலவர்க்குள் வாய்மைத் தமிழரும் வையாபுரியாருமென இருசாரார் இருப்பதால் அவ்வேறு பாடறிந்து வாய்மைத் தமிழரையே ஊக்கி வருமாறு இம்மாநாடு அரசை வேண்டுகின்றது.

22. இந்திய அரசியல் அமைப்பில். 17-ஆம் பகுதியை அடியோடு நீக்கிவிடவும் 8-ஆம் பட்டியலில் ஆங்கிலததையும் சேர்த்துக் கொள்ளவும் இம் மாநாடு நடுவணரசை வற்புறுத்துகின்றது.

23. முதற்கோணல் முற்றுங்கோணல் என்பதற்கேற்பத் தமிழ் இயல்பிற்கு ஏற்காத அயல் எழுத்துக்களையும், அயற்சொற்களையும் சேர்த்தும், மேலை மொழி அறிவியல் கம்மியக் கலைக்குறியீடுகளை மொழி பெயர்க்காது அப்படியே கையாண்டும், தமிழ் மரபிற் கொவ்வாத ஒரு புது நடையைத் தோற்றுவித்தும் அடியோடு தமிழை கெடுக்கத் துணிந்திருக்கும் மதுரைப் பல்கலைக் கழகப் புதிய பாடத் திட்டத்தை மிக மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், அதை உடனே விட்டுவிடுமாறும் இம்மாநாடு அறிவுறுத்துகின்றது.

24. மோரிசு, பிசி முதலிய நாடுகளில் வாழும் தமிழ்மாணவர்கட்குத் தேவையான தமிழ்ப் பாடப்புத்தகங்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் வழி உருவாக்கி வழங்குமாறு தமிழ்நாட்டு அரசை இம் மாநாடு வேண்டுகிறது.

25. அயல்நாடுகளில் உள்ள தமிழ்ச் சிறார்க்கட்கு வானொலி வழியே தமிழ் பயிற்றுவிக்க ஆவன செய்புமாறு இம்மாநாடு இந்திய நடுவணரசை வேண்டுகிறது.

०

இருமொழி போதும்!
மும்மொழி வேண்டா!

—அரசியல் நோக்கன்.

இந்திய நாட்டை அலைக்கழிக்கும் மொழிச்சிக்கல் தீர இருமொழித் திட்டமே ஏற்றதாகும். இருமொழித் திட்டத்தை எதிர்ப்போர் நாட்டைப் பிரிக்க 'வெடி' வைப்போரே; மும்மொழித்திட்டம் என்ற கயமைத் திருட்டுத் திட்டத்திற்கு ஆலவட்டம் வீசுபவரால் இந்தியா துகள் துகளாய்ச் சிதறுண்டு போய்விடும் என்பது திண்ணமே. ஆட்சிமொழி, பொதுமொழி, தேசியமொழி, ஒருமைப்பாட்டு மொழி, இணைப்புமொழி என்று பல பட்டங்கள் கட்டப்பெற்று, ஒரே இந்திமொழியைத் திணிக்கத் தில்லியின் அரசும், இந்திப் பேய்களும் படாத பாடுபட்டு வருகின்றன. இந்தியாவை ஆங்கிலம் ஒன்று படுத்தியதை வரலாறு காட்டுகிறது. இந்தியாவைப் பிளவு படுத்த இந்தி வந்துவிட்டது. நடுவணரசு நடுநிலையரசாக இருக்க வேண்டுமே தவிர, இந்தி வெறியரின் அடிமையரசாக இருத்தலாகாது. தமிழகம் எக்காலத்திலும் இந்தியை ஏற்றுக் கொள்ளவே கொள்ளாது. இஃது உறுதி. உறுதி. உறுதி.

தமிழ்நாட்டிலுள்ள பேராயக்கட்சி (காங்கிரசுக்கட்சி) இந்தியைத் திணித்த தமிழுக்குப் பகையான கட்சி என்று மக்கள்—குறிப்பாக மாணுக்கர்கள்—திட்டவட்டமாக அறிந்து கொண்டனர். இனி பேராயக்கட்சி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தமிழின் மீது உருகியுருகி அன்பு பாராட்டினுலும் பொதுமக்கள் அதை வெறும் 'பொய் நடிப்பு' என்றே உறுதியாகக் கருதுவர். தமிழகப் பேராயக் கட்சி தமிழுக்கு எதிரான- தமிழ்ப் புலவோர், அறிஞர்க்கு எதிரான—கட்சியே என்பதைத் தன் கொள்கையாலும் பேச்சாலும் எழுத்தாலும் நாடோறும் நிலைநாட்டி வருகிறது. இந்நிலையில் இந்தியை வரவேற்று அக்கட்சியும், கட்சித்தலைமையும் 'பல்லாண்டு' பாடுகிறது. இந்நிலை அக்கட்சிக்கு அரசியல் வீழ்ச்சியையே அளிக்கும்.

இந்திய நாடாளுமன்றம் ஆங்கிலமும், தாய்மொழிகளும் பொது ஆட்சி மொழிகள் என்று அறிவித்து விடவேண்டும். 'இந்தியே ஆட்சி மொழி' என்ற அரசியலமைப்புச் சட்டத்தைத் தூக்கியெறிந்து என்றென்றும் அதை நீக்கி வைக்கவேண்டும். நாட்டின் ஒற்றுமையை உண்மையில் அரசினர் விரும்புவது உண்மையானுல் இந்தியை மூலையில் முட்டை கட்டிப் போடவேண்டும். இன்றேல் தமிழ்நாடு பிரிவது உறுதியாகிவிடும். தமிழக மாணுக்கரைச் சுட்டுத்தள்ளியோ, சிறையிலடைத்தோ, கொஞ்சிக் கெஞ்சி மயக்கியோ, அச்சுறுத்தியோ,

அறிவுரை கூறியோ இந்தியை ஏற்கும்படி செய்ய முடியாது. மாணுக்கர் மட்டும் இந்தியை எதிர்க்கவில்லை; இந்தியை மாணுக்கரின் பெற்றோரும், பெரியோரும் எதிர்க்கின்றனர்! இந்தியைப் படித்தோரும், அரசுத்துறை அலுவலர்—ஊழியரும் எதிர்க்கின்றனர்! இந்தியைப் பேராசிரியப் பெரியோர்களும், அறிவியலறிஞர்களும், தமிழ்ப் புலவோரும், ஆசிரியப் பெருமக்களும், மருத்துவர்களும், வழக்கறிஞரும் நேரிடையாகவும்-மறைமுகமாகவும் எதிர்க்கின்றனர்-தமிழிலக்கியத் துறையில் 'இந்தி எதிர்ப்புப் பாடல்கள்' என்ற தனித்துறையே உருவாகிவிட்டது என்ருல், தமிழ்ப் பாவலரினம்—தமிழறிஞரினம் எந்த அளவுக்கு ஆற்றலோடும் ஆண்மையோடும் இந்தியை எதிர்க்கிற தென்பதை அறியலாம்! பேராயக் கட்சியிலேயே பலர் இந்தித் திணிப்பை மட்டுமின்றி—இந்தியையுமே—எதிர்க்கின்றனர்!

தமிழைவிட இந்தி எந்த வகையில் உயர்ந்த மொழி? தொன்மையில் சிறந்ததா? இலக்கண வளத்தில் உயர்ந்ததா? இலக்கியச் செழுமையில் மிகுந்ததா? ஒலியியற் கலையில் ஓங்கியதா? அழகில் சீரியதா? ஆற்றலில் மிக்கதா? அறிவுத் துறைகளில் வளர்ந்ததா? கலைத்துறைகளில் கனிந்ததா? உலகியலுக்குத்தான் உதவக் கூடியதா? சட்டத்தில் ஏறிவிடுவதாலேயே இந்தி ஏற்றமுடையதாகாது. இந்தி மறைமுகமாகத் திணிக்கப்பட்டால் மிக விரைவாக நாட்டுப் பிரிவினைக்கு வழி பிறந்துவிடும்! தமிழகமெங்கும் முன்னெப்போதையும் விடத் 'தமிழகம் பிரிய வேண்டும்' என்ற உணர்வு மிகுந்து வருவதை யாரும் மறைக்க—மறுக்க முடியாது.

பெரியார். ஈ.வே. இராமசாமியார் தமிழ்நாடு தனி நாடாக விடுதலை பெறவேண்டும் என்ற கருத்துடையவர். அக்கொள்கைக்கு அருமையான வளர்ச்சி இந்தித் திணிப்பால் உருவாகி விட்டது. கட்சிகள் மக்களுக்காகவே. தமிழகப் பேராயக் கட்சியும், தில்லியரசும் இதையுணரவேண்டும். தமிழை ஒழிக்க வடநாட்டினர் முயல்கின்ற முயற்சிக்குத் தமிழ்நாட்டில், யார் துணை போனுலும் அவர்கள் வரலாறு தீர்ந்து போனதே யென்பதை மறத்தலாகாது. தமிழ்க்கு எதிர்ப்புக் காட்டுவோன் தமிழினத்தைக் காட்டிக் கொடுப்பவனே! தமிழகத்தை அழிப்பவனே! ஆங்கிலமும்—தீந்தமிழுமே தமிழகத்திற்குப் போதும்; இந்தி என்ஞான்றும் வேண்டவே வேண்டா. இதனை மக்கள் உறுதியாக அரசுக்கு உணர்த்த வேண்டும். கரவும் சூதுமுள்ள சூழ்ச்சித் திணிப்புத் திட்டமான மும்மொழித் திட்டம் என்றென்றும் வேண்டியதில்லை!

தமிழ் வெல்க!

தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகள்: பழந்தமிழகத்தில் சாதியில்லை.

பன்மொழிப் புலவர் — இரா. மதிவாணன். க.மு.

தமிழர் இனிய மக்கள். தமிழ் என்னும் சொல்லுக்கே இனிமை என்று பொருள். இனிய பண்புகளைப் பெற்ற மக்களிடை இன்றைய சாதிப்பிரிவு தோன்றியிருக்க முடியாது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே தமிழரின் தலையாய கொள்கை. யாவரும் கேளிராய்க் கருதப்படின் அத்தகைய மக்கள் சாதிப்பிரிவில் நம்பிக்கையுடையவராய் இருந்திருத்தல் இம்மியும் இயலாது. சாதிப்பிரிவில் நம்பிக்கையுடைய ஒருவன் யாவரும் கேளிர் என்று மறந்தும் கூறான். சாதி என்னும் சொல்லே தமிழ்ச் சொல்லன்று. இஃதொன்றே, சாதிப்பிரிவு தமிழரிடை என்றும் இருந்ததில்லை; ஆரியக் கலப்பின்போது தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நஞ்சு என்பதைத் தெளிவாக்கும்.[1]

அனைத்துயிர்களையும் உயர்திணை அஃறிணை என இரண்டே பிரிவாகத் தமிழ்முன்னோர் பிரித்தனர். இப்பிரிவு அறப் பழங்காலத்தில் தமிழரின் முன்னோரால் வகுக்கப்பட்டது. மாந்தரனைவரும் உயர்திணையினரே. அவருள் இழிந்த பிறப்பினர் எவரும் இலர். மக்களல்லாத பிற உயிர்கள் மக்களுக்கு ஒவ்வொரு வகையில் உதவுவனவாக உள்ளன. எனவே அவற்றை உயர்திணைக்கு எதிரான இழிதிணை என்னும் சொல்லால் சுட்ட நாகரிகத்தில் முதிர்ந்த தமிழ் முன்னோரின் நா கூசியது. இழிதிணை என்று குறிப்பிட்டால், அஃதுணர்ந்து அவ்வுயிர்கள் வருந்தப் போவதில்லை; கிளர்ச்சி செய்யப் போவதுமில்லை, எனினும், செம்மையும் பண்பாட்டு முதிர்வும்பெற்ற தமிழர் இழிதிணை என்னும் சொல்லைத் தவிர்த்து, அஃறிணை என்னும் சொல்லையே ஆண்டனர். தீயவன் என்று ஒருவனைச் சொன்னால் அவன் மனம் நோகும் என்பதற்காக நல்லனல்லன என்று கூறுவது சான்றோர் வழக்கம். நாவில் நல்லனவே பேசிப் பழகிய உயர்ந்த பண்பாட்டு மரபினராகத் தமிழர் விளங்கினர் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை. விலங்குகளைக் கூட இழிவுபடுத்தாத

1. 'Caste the curse of India'-williams
நால்வகைச் சாதி இந் நாட்டினில்நாட்டினீர்—(கபிலர்)

தமிழன் மாந்தரைச் சாதிப்பிரிவுகளால் இழிவுபடுத்துவானல்லன். தமிழன் சாதிமதங்களுக்கு அப்பாற்பட்டவன். பண்புக்காகவே வாழ்ந்த இனம் தமிழினம். அதுவே அவன் குடிப்பெருமை. உயர்ந்த பண்பாடும் சிறந்த ஒழுகலாறுமே அவன் சாதி. தாழ்விலா மானமே, அவன் மதம்.

பெயரும் வினையும் என் றாயிரு வகைய
திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே

(தொல். பொ. 20)

இந்நூற்பாவின்படி, நானிலப் பெயராலும் தொழிலாலு மல்லது பிறப்பினடிப்படையில் எவருக்கும் பெயரிடப்படவில்லை.

பறையரும் பாணரும் வேளிர் குடியைச் சார்ந்தவராயிருந்து பிரிக்கப்பட்டவரே என்பது புலைகொலை நீக்காத பதினெண்வேளிர் களின் [2] பெயர்ப்பட்டியலிலிருந்து தெரிகிறது. அப்பதினெண்குடி வேளிர்: கைக்கோளர், தச்சர், கொல்லர் கம்மாளர், தட்டார், கன்னார் செக்கார், மருத்துவர், குயவர், வண்ணார், துன்னர், ஓவியர், பாணர், கூத்தர், மங்கலர், (நாவிதர், மஞ்சிகர்) சங்றுகப்பார், பாகர், பறையர் என்போராவர். வேளாண் என்பது இன்னும் மலையாளத்தில் தாழ்த்தப் பட்டவரின் சாதிப் பெயராகவுள்ளது. பழந்தமிழகத்தில் வேளாப் பார்ப்பார், மண்ணீட்டாளர் (சிற்பி), தோலின்துன்னர், வீழ்குடி உழவர், சூதர், மாகதர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர், கண்ணுள் வினைஞர் (ஓவியர்), குயிலுவர், பாசவர், காழியர், ஓசுகர் போன்ற பல்திறத் தொழிலாளர் இருந்தபோதிலும் தொழிலடிப்படையில் வேறுபாடு அல்லது சாதிப்பிரிவு தோன்றவில்லை. கடைக்கழக இலக்கியங்களில், சாதியிலிருந்து தள்ளிவைத்தல், தப்புவைத்தல், நாச்சுடல், நீர்தெளித்தல், மீண்டும் சாதியில் சேர்த்துக்கொள்ள வேட்டை விருந்துவைத்தல் போன்ற சாதிக் கட்டுப்பாடுகளைக் குறித்த ஒரு நிகழ்ச்சியாயினும் இடம் பெறவில்லை.

---

2. துவராபதி போந்து நெடுமுடியண்ணலுழை பதினெண்குடி வேளிரைக் கொணர்ந்து அருவா நாட்டிலிருத்திக் காடுகொன்று நாடாக்கியதாகக் கூறும் உரையாசிரியர்களின் குறிப்பு, புலைகொலை நீக்காத இப்பதினெண்வகை வடபுலத்து வேளாண் தொழிலாளரையே குறித்ததாகல் வேண்டும். புதிதாக உருவாகும் நாட்டிற்கு அல்லது நகரத்திற்குப் பல்வகைத் தொழில் வல்லுநரின் தேவை இன்றியமை யாதது. கருங்கற்றச்சரும் தோலின் துன்னரும் தெலுங்கராட்சின் போது தமிழகம் வந்தமை காண்க.

தீண்டாமையும் இருந்ததில்லை:

புலையர், பாணர், பறையர், வள்ளுவர் என்னும் மக்கள் பழந் தமிழகத்தில் தீண்டப்படாதவராகவோ தாழ்த்தப்பட்டவராகவோ கருதப்படவில்லை. சிறுபாணாற்றுப் படையிலும் மலைபடுகடாத்திலும் நானிலத் தமிழரில்லத்தரசிகளும் பாணரை அன்புடன் வரவேற்று விருந்தோம்பியுள்ளனர். தம் குழந்தைகளின் வாயிலாக அண்ணா, மாமா என முறைப்பெயர் வைத்துப் பாணரை அழைத்து வந்து வெள்ளித் தட்டில் உணவிட்டதை,

'மீன் பூத்தென்ன வான்கலம்பரப்பி' (பெரும்பா–477)
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்.
(மலைபடு–185)

என்னும் வரிகள் விளக்கிநிற்கின்றன.

பாணரை வரவேற்றுத் தலையில் பொற்பூச்சூட்டி வெளிதுடுக்கச் செய்து பரிகலந் திருத்தி உணவிட்டு மகிழ்வித்த மன்னர் பலர். பாணர் குடிப்பிறந்த ஔவையாரின் தலையைத் தொட்டு நீவி அன்பு கனிய உரையாடினான் அதியமான். அகத்துறைப் பாடல்களில் பாணன் தலைமகனின் தோழனாகக் கூறப்படுகிறான்.

உயர்திணை, அஃறிணை யென்னும் பாகுபாடு தவிர உயர்திணை மக்கட்பகுப்பில் உட்பிரிவுகளான சாதிகள் இருந்திருந்தால் பொருளிலக்கண ஆசிரியர் தவறாமல் குறித்திருப்பர். புலத்தியை 'நலத்தகைப் புலத்தி' என்று குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுவதால் இன்றைய தாழ்த்தப்பட்டவர் அக்காலத்தில் தாழ்த்தப்பட்டவராக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

கணியன், கணிவன், வள்ளுவன் கூத்தன், பாணன், துடியன் ஆகிய அனைவரும் அரசனின் நளோலக்கத்திலும் அனைவர்க்கும் ஒப்பாக இடம் பெற்றவர்கள். அரசனின் பாராட்டுக்கும் உரியவராய் இருந்தனர். அரசன் புலவரையும் பாணரையும் தழுவி வரவேற்றான். முரசு கட்டிலில் அயர்ந்து உறங்கிய மோசிகீரனார் தோல்தொழில் செய்யும் குடியில் பிறந்தவராயிருந்தும் மன்னன் அவருக்குக் கவரி வீசிப் பெருமைப் படுத்தினான். வள்ளுவர் என்பார் அரசர்க்குள்படு கருமத் தலைவராயிருந்தனர். இன்றைய தாழ்த்தப்பட்டவரின் முன்னோரான பாணரும் கூத்தரும் இசைத் தமிழையும் நாடகத்

தமிழையும் வளர்த்த பெருமக்களாக இருந்தனர். ஏழாம் நூற்றூண்டில் கூட சம்பந்தரின் யாழ்மூறிப் பண்ணுக்கு யாழ்மீட்டிய திருநீல கண்டயாழ்ப்பாணரைக் காண்கிறோம். முத்தமிழில் இருதமிழ் வளர்ப்பாளர் தாழ்த்தப்பட்டபோது தமிழும் வளர்ச்சி குன்றி வடமொழியிலும் தாழ்ந்தமொழியாகக் கருதப்பட்டு விட்டது. தொழில் வேறுபாடு ஏற்றத்தாழ்வை உண்டாக்க வில்லை.

வெண்ணிக் குயத்தியார், கொல்லன்அழிசி, ஔவையார், கூலவாணிகன் சாத்தனூர் போன்றோர் தொழில்கருதி ஏற்றத்தாழ்வாக தமிழகத்தின் எப்பகுதியிலும் நடத்தப்படவில்லை. கடைக்சழக இலக்கியங்களில் ஒரோவிடத்து, வயிற்றுப் பிழைப்புக்காக மன்னர் அல்லது செல்வர் ஏவிய தொழிலைச் செய்யும் அடித்தொழிலாளரை இழித்துரைக்கும் பகுதிகள் உள்ளன.

'துடி எறியும் புலைய'

'எறிகோல் கொள்ளும் இழிசின'

'புலைமகனுதலின் பொய்நின் வாய்மொழி

நில்லல் பாண செல்லினிப் பரியல்'

இவை தொழிலின் இழிவுகருதியன அல்ல; பிறர்பால் அடிமைத்தொழில் பூண்டமை பற்றிய வசை. வசைமாரி பொழிய விருப்புவோர் யாதேனும் ஒரு குறையைக் கண்டு இழிவு படுத்துவது இயல்பு. மலையாளத்தில் திருவோண நாளன்று நடக்கும் சேரிப்போர், ஓணத் தள்ளு ஆகிய நிகழ்ச்சிகள் புலையரும் பாணரும் பண்டைக்காலத்தில் பெரும்போர் மறவராக வாழ்ந்த நிலையை இன்னும் நமக்கு நினைவூட்டு கின்றன. இருந்தும் துடியெறியவும் பறையறைபவும் தொழுப்பு பூண்டு துணைத் தொழில்களைச் செய்கின்ற கரணியத்தால் இழித் துரைப்பதாக இருக்கும் கடைக்கழகப் பாடல்கள் பொருளியல் ஏற்றத் தாழ்வைக் காட்டுவனவே ஒழிய பிறப்பால் அமைந்த சாதியுயர்வு தாழ்வைக் காட்டுவனவாகக் கொள்ள முடியாது.

'சங்கைக்

'கீர்கீர் என அறுக்கும் கீரனோ என்கவியை

ஆராயும் உள்ளத்தவன்'

எனச் சங்கறுக்கும் தொழில்செய்த நக்கீரனூர் இழிவுபடுத்தப்பட்டார்

'இழை நக்கி நூல்நெருடும் ஏழை யறிவனோ
குழைநக்கும் பிஞ்ஞகன் தன் கூத்து'

என்னும் பாடலில், செய்யும் தொழிலெல்லாம் சீர் தூக்கிப் பார்க்குங் கால் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை எனப்பட்ட நெசவுத்தொழில் இழிக்கப்படுதல் காண்க.

'தண்டச் சோறுண்ணும் பார்ப்பு' எனப் பார்ப்பனரை இழிவு படுத்திப் பாடினார் பாரதியார். எனவே, எத்தொழிலாளியையும் அத்தொழிலின் அல்லது தொழிலாளியின் ஏதேனும் ஒரு குறைவுள்ள கூற்றைக் கொண்டு வெறுப்பினாலோ, சினத்தினாலோ நகைப்புக் காகவோ, இழிவுபடுத்துதல் இயல்பான நிகழ்ச்சி. ஆதலால், கடைக்கழக இலக்கியங்களிலுள்ள இச்சான்றுகளைக் கொண்டு பிறப்பி னடிப்படையிலான சாதிவேறுபாடு தமிழரிடை இருந்தது என்று கூறுதல் பொருந்தாது. அத்தொழிலாளர், கல்வி அல்லது வீரத்தில் மேம்பட்டு உயர்ந்த வாழ்க்கைநிலை எய்த அன்று வாய்ப்புகளிருந்தன.

அரசனிடம் அடிமைத்தொழில் புரிந்தோர் முடிமன்னரான வரலாறுகளும் உள. வடநாட்டில் அரசாண்ட பிரதிகார அரசமரபினர் ஒரு காலத்தில் அரண்மனை வாயிற்காப்பாளராக இருந்தவரின் கால் வழியினர் என்று வரலாற்றாசிரியர் [3] கூறுகின்றனர். பழந்தமிழ ரில்லங்களில் குழந்தை வளர்க்கும் பணிப்பெண்ணான செவிலியும் நற்றாய் போன்று நன்கு மதிக்கப்பட்டாள் [4] தமிழர் பண்புநோக்கிப் பிறரை நன்கு மதித்தனரேயன்றிப் பிறப்பு நோக்கியோ செய்யும் தொழில் நோக்கியோ அன்று.

தமிழர் குடிவழியினர் - குலவழியினரல்லர்:

தமிழர் தம்மைக் குடிப்பெயராலேயே அழைத்துக்கொண்டனர். ஊர்ப்பெயரோடு குடிப்பெயர் இணைந்து வருவதும் உண்டு. ஆவூர் மூலங்கிழார், கோவூர்கிழார் என்பன இத்திறத்தன. மூவேந்தர் தம் குடிப்பெயரால் அறியப்பட்டனர். ஒரு குடியினர் எத்தொழிலைச் செய்தாலும் குடிப்பெயர் மாறாது. சாதிப்பெயர் அல்லது குலப்பெயர் செய்யுந் தொழிலுக்கேற்ப மாறும். வேளிர் உழவுத்தொழில் செய்பவ

3. Political History of Ancient India (P.631)

4. பிராமணர் தம் தங்கையாயினும் சிறிதும் மதியாது வாடி போடி என மனைவியை விரட்டுவது போன்று விளித்தலை ஒப்பிடுக.

ராயினும் நாடாளும் வேந்தராயினர். வேளிரில் ஒளியர் என்பார் மற்றை மண்டலங்களில் அரசராதற்குரியர் என்று கூறப்படுகிறது. பண்பு, ஆற்றல், செய்தொழில், அருஞ்செயல், வாழ்நிலம் குடிமுன்னோன் ஆகியவற்றின் அடிப்படையில் குடிப்பெயர்கள் தோன்றின. சாதிப்பெயர் பிறப்பினடிப்படையில் தோன்றியது. குடிப் பெயர் ஏற்றத் தாழ்வைக் காட்டாது. சாதிப்பெயர் ஏற்றத்தாழ்வைக் காட்டும். திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயராலும் குடிப்பெயர் அமைந்தது. சேர்ப்பன், பொருப்பன், வெற்பன், ஊரன், நாடன் என்பன வாழும் நிலத்தாற் பெற்ற பெயர்கள். வாழ்ந்த நிலத்தால்பெயர் பெற்ற தமிழர், பிறந்த குலத்தால் பெயர்பெறும் நிலைக்கு வந்துவிட்ட இக்காலத்தில் பழைய நிலையை உணர முடியாதவராயினர். செய்யுந் தொழில் வருவாயினளவைபொட்டி ஏற்றத்தாழ்வு ஒருகால் தோன்று மாயினும், வாழ்ந்த நிலத்தால் பெற்றபெயரில் ஏற்றத்தாழ்வு தோன்ற வாய்ப்பே இல்லை. ஊரனும் வெற்பனும் ஒத்தமதிப்பிற்குரியர். இருபிறப்பாளர் எனப்படும் பிராமணர் எவரையும் தமக்கு ஒப்பாகக் கொள்ளார். ஏற்றத்தாழ்வற்ற தமிழரிடை கடைக்கழகக் காலத்தில் ஆரியக் கோட்பாடுகள் மென்மெல புகுத்தப்படினும் தமிழ் மக்கள் எவரையும் தாழ்வாக நடத்தவில்லை.

பாணன், பறையன், துடியன், கடம்பன் என்பன குடிப்பெயர். இவை தொழில்பற்றி வந்த குடிப்பெயர். பாணன் மகன் கணி (வானநூல்)யத்தில் சிறந்து நின்றால் கணியன் என்றும், அரசர்க் குள்படு கருமத்தலைவனானால் வள்ளுவன் என்றும், போர் புரியுங்கால் மறவன் என்றும், புலமையிற் சிறந்தால் புலவன் என்றும் பெயர் பெற்றிருக்கிறன். குறிஞ்சி முல்லை நிலத்தார் ஆயராயும் வேட்டுவ ராயும் வேந்தராயும் போர்மறவராயும் உழவராயும் பாலைநிலக் கள்வராயும் கற்றுவல்ல சான்றோராயும் பண்களில் தேர்ந்த இசை வாணராயும் பல்வேறு சூழல்களில் பல்வேறு தொழில்களைச் செய்து வந்துள்ளனர். எத்தொழிலைச் செய்தாலும் தம் குடிப்பெயரால் தம்மை அழைத்துக் கொண்டனரே யன்றிப் பிறப்புத் தொடர்பான சாதிப் பெயரால் அழைத்துக்கொள்ளவில்லை. வேட்டையில் சிறந்த ஓரி தன்னை வேட்டுவச் சாதியினன் என்று அழைத்துக் கொள்ள வில்லை. ஆதன் ஓரி எனக் குடிப்பெயரால் அறியப்பட்டான். செய் தொழில் காரணியமாக வேறுபாடு அக்காலத்துக் கற்பிக்கப்படவில்லை.

போர், கொள்ளைநோய், வற்கடம் ஆகியவற்றால் மக்கள் இடம்

பெயர்ந்து வேற்றிடஞ் செல்ல நேர்வதும் வெவ்வேறு தொழில்களைச் செய்ப நேர்வதும் வரலாற்றுப்போக்கில் இயல்பான காட்சிகள். நெய்தல் நிலத்துப் பரதவன் குறிஞ்சி நிலத்துக்குச் சென்று வேட்டுவனாக வாழநேரும். வேந்தனொருவன் நாடிழந்து வேற்று நாடேகி உழவுத்தொழில் செய்து வாழநேரும். களப்பிரர் காலத்தில் தமிழ்வேந்தர் இங்ஙனம் மறைந்து வாழ்ந்தனர். தானைத்தலைவராயும் போர்மறவராயும் இருந்த செங்குந்தர் நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தனர். யாழில் வல்லவராய் அரண்மனையில் துயிலெடை பாடிய பாணர் சேரநாட்டில் இன்று கூடை முடைந்து வாழ்கின்றனர்.

செய்கின்ற தொழிலின் ஏற்றத்தாழ்வினைச் சிறிதும் பொருட்படுத்தாமல் குடிப்பெருமையை வளர்க்கும் பண்புக்கு மட்டும் மதிப்புத் தந்து தமிழினத்தை ஒரே இனமாகக் கட்டிக் காத்த தமிழர் குமுகாய அமைப்பு பாராட்டத்தக்கதாகும்.

சிறப்பும் செய்தொழிலும்:

தமிழர் என்றும் பிறப்பால் ஏற்றத்தாழ்வு கருதுபவரல்லர் என்பதை 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்னும் குறளில் வள்ளுவர் வற்புறுத்துகிறார். 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்பது அவரவர் செய்யும் வாழ்வுக்கேற்ற தொழிலன்று. தொழில்களைக் குறிப்பதாயின் 'பல்தொழில் வேற்றுமையான்' என்று வள்ளுவர் பாடியிருப்பார்.

இங்குச் செய்தொழில் வேற்றுமையான் என்று வினைத்தொகை வாய்பாட்டால் கூறியது, ஒருவன் தன் கடமை யாற்றுங்கால் எத்துணை நேர்மையாக, திறமையாக, ஒழுங்காக, செப்பமாகச் செய்யும் திறனுடையவனோ [5] அந்த அளவுக்கேற்ப அவனுக்குச் சிறப்பு மிகும் என்பதற்கே யாகும். தொழில் மட்டும் கருதுவதாயின், தொழில்களில் உழவுத் தொழிலே சிறந்தது என்று வள்ளுவரே கூறியிருப்பதால், உழவர்க்கே சிறப்பு ஒவ்வும் ஏனைய தொழில் செய்வார்க்குச் சிறப்பு ஒவ்வாது என்று கூறியிருப்பார்.

எப்பணியாயினும் அதனை ஒருவன் செய்வதற்கும் மற்றவன் செய்வதற்கும் செய்திறன் வேறுபடுவதைக் காணலாம். இதிலிருந்து, கடமையில் சிறந்த மக்களால் அந்த இனத்துக்கும் நாட்டுக்கும் நன்மை சேரும். தமிழர் ஒவ்வொருவரும் கடமை யுணர்வினராய்த் தாம்

---

5. தொழில் வகை யமைந்த பத்தர்-தொழில்வகை-திறப்பாடு (பெரும்பா 234, உரை)

மக்களவை

கலைஞர் கவனிக்க வேண்டும்!

ம: 225: பேரன்புடையீர், வணக்கம் பல. சென்ற ஆடவைத் திங்கள் 18- ஆம் பக்கல் (2-7-78) ஞாயிறு அன்று, நக்கீரனார் அவர்கள் தலைமையில் நடந்த உ.த. சழக நான்காவது மாநாட்டிற்குத் தாங்களும் சிறப்புச் சொற்பொழிவாற்ற இசைவு அளித்துள்ளீர்கள். அதன்படி விளம்பரமும் செய்யப்பெற்றது. ஆனால் தாங்கள் அம் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்திருப்பதால், தங்களின் வீர (அரசியல்) வரலாற்றில் ஒரு கரும்புள்ளி விழுந்துவிட்டது. தாங்களே செ.சொ.பி. அகரமுதலித் திட்டத்திற்கு, நம் கண் போன்ற பாவாணர் அய்யா அவர்களை, நெறியாளராக அமர்த்தஞ்செய்து விட்டு, இப்போது அவர் (மாநாட்டில்) இரண்டு தீர்மானங்கள் தமிழக அரசைப் பாராட்டி (வரவேற்று அன்று) நிறைவேற்றினார் என்பதை முன்வைத்து, அவர் கூட்டிய மாநாட்டிற்கே தாங்கள் செல்லாமல் புறக்கணித்ததை எண்ணுகின்ற பொழுது தங்களிடம் மொழி, இன உணர்வு (உண்மையாக) மறைந்து விட்டதோ என்று ஐயுற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

மேலும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அய்யா அவர்களைப் பற்றித் தாங்கள் நன்றாக அறிவீர்கள். இவர் அடியொற்றி நாங்கள் (தென்மொழி இயவம்) இயங்குவதாலும், **அவர் ஊட்டிய உண்மையான தமிழ் மொழி, இன உணர்வால் தான், தங்களுடன் இன்னும் உரிமையுடன்** (இன்னும சற்று வெளிப்படையாகக் கூறவேண்டுமானால் 'நம்மவரை நமமவரே தான் ஏமாற்றுகிறார்கள்' என்பதைப் போல) சண்டையிடுகிறோம். ஆனால் பொதுமக்களிடையே இச்செய்திகள் பரவும் போது தங்களின் நிலை என்ன? இது பொய் என்று கூறப் போகிறீர்களா? இல்லை இதற்கும் ஒரு வண்ணம் பூசி மெழுகப் போகிறீர்களா?.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிறந்த குடிப்பெருமையைத் தம் ஆள்வினைத் திறத்தால் மேன்மேலும் உயர்த்தக்கடவர் என்று வள்ளுவர் கூறுகிறார். செய்தொழிலில் சிறப்புப் பெறாமல் பிறப்பால் பெருமை பெற நினைக்கும் ஆரியக் கோட்பாட்டினைத் தகர்த்து சாதி யென்னும் நச்சுமரம் வேரூன்றா தவாறு இக்குறள் தடை கோலியது. ஆரியக் கோட்பாட்டினை யொட்டி, செய்தொழில் வேற்றுமையான் என்பது சாதிக்கு அடிப் படையான தொழில் வேற்றுமைகளைக் குறித்ததாக உரைப்பது சிறிதும் பொருந்தாது.

(தொடரும்)

நாங்கள் இறுதியாகக் கேட்பதெல்லாம் ஒன்றுதான். அஃதாவது மொழி, இன விடுதலைக்கு (முழு விடுதலை) முன்னின்று தொண்டாற்றித் தமிழக வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தைப் பெறப் போகிறீர்களா? இல்லை விடுதலையாவது, மண்ணாவது யார் கேட்கிறார்கள்? என்று கூறித், தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளப் போகிறீர்களா? இந்த வினாக்களுக்குத் தேவையான விடையைக் கண்டீர்களானால், உங்களை அசைக்க யாராலும் முடியாது. இதில் தவறான விடை கண்டீர்களானால், பெரியார், அண்ணா வளர்த்த திராவிட இயக்கங்களின் அழிவையும் யாராலும் தடுக்க முடியாது என்பதை, ஊன்றிப் படித்தீர்களானால் தங்கள் நிலையும், தென்மொழி இயக்கத்தின் நேர்மையான, தேவையான (தங்களையும் இணைத்து) பணிகளையும் உணர்ந்து, எதிர்காலத் தமிழர்களின் நிலையை எண்ணுவீர்களா? இதற்கு விடையும், அதன் விளைவும் தங்களுக்கே உரியவாகும்.

குறிப்பு: மொழி, இன உணர்வின் உரிமையால் இதற்கு விடை கேட்கிறோம்; அதே உரிமையோடு விடை கொடுப்பீர்கள் என நம்புகின்றோம். நன்றி. (தென்மொழி அரங்க-தமிழ்மணி)

வயவர். தென்மொழி இயவம்--கோவை: 15

பி.கு: இதன்படி ஒன்று கலைஞர்க்கு விடுக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் துயர வாழ்க்கை.

ம: 226: அன்பின் ஐயா, வணக்கம் பல. தாங்கள் நலமே தமிழகம் சென்றடைந்திருப்பீர்கள். நாடாளு மன்ற உறுப்பினரும் யாழ்-தமிழ்ப் பெருங்குடி மக்களும் தங்களை இனிதே வழியனுப்பி வைத்த செய்தி நாளிதழ்கள் வாயிலாக அறிந்து மகிழ்ந்தோம். தாங்கள் யாழ் நகரில் ஆற்றிய உரைகளையும் பார்த்தோம். நிற்க கண்ணிய பண்டாரகர் (டாக்டர்) பட்டம் பெறுவதற்காக இங்கு வருகை தந்த தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஈழத் தமிழ் மக்களின் இன்றைய உணர்ச்சியை அறியாது அரசுக்குப் போற்றி பாடிவிட்டு நாட்டுப் பிரிவினை இன, மொழிப் பற்று என்பவற்றிற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வானொலியிலும் விளம்பரம் பெற்றுச் சென்றுள்ளார். எனினும் அவர் கலந்து கொண்ட கூட்டத்தில் மக்கள் தொகை மிகக் குறைவாக இருந்ததை அறிந்து ஆறுதலடைந்தோம். இதே வகையில் முன்னர் பேசிய கி.வா. சகந்நாதனுக்குத் தகுந்த பாடம் கற்பித்தோம். ஆனால் தெ.பொ. மீ. அக்கருத்தைக் கூறுங்கையில் எம் போன்றோர் கூட்டத்தில் இருக்கவில்லை என்றே எண்ணுகின்றேன். தக்கபாடம் கற்பித்திருப்போம். தப்பிவிட்டார்.

‘இதயம்’ மணியனும் எவரும் அறியாது வந்துதிரும்பி விட்டதாய் அறிகிறேன். இலங்கைத் தமிழரின் உணர்வுகளை அறியாது இங்கு வரும் தமிழகத்தாரின் வருகையை நாம் வெறுக்கின்றோம். நிற்க.

அட்டன் ஊரில் குயில்வத்தைத் தோட்டத்தின் தோட்டத் தொழிலாளரின் சந்திப்பு தங்களுக்கும் பசுமையாக இருக்குமென எண்ணுகின்றேன்.

இழப்பு என்பது அவர்களின் வாழ்க்கையோடு—ஈழ வருகையோடு பின்னிப் பிணைந்தது. இதனைத்தான்

ஊரான ஊரிழந்தேன், ஒத்த பனந் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே பெத்த தாயை நானிழந்தேன்

என்ற நாட்டுப் பாடல் தெரிவிக்கின்றது.

அத்தோடு அமையாது ஈழம் வந்தநாள் முதல் பட்ட துன்பத்தைப் பொருது எப்பொழுது தாயகம் மீள்வோம் என்ற எண்ணத்துடனேயே அவர்கள் நூற்றாண்டுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளனர்.

'காறுதடி கம்பரிசி, கசக்குதடி காணுத் தண்ணி
இனிக்குதடி நம்ம சீமை, இனிப்பயணம் தப்பாது"

என்ற பாடல் இதையே உணர்த்துகின்றது.

இவர்களின் துயரங்களை உலகுக்குணர்த்தும் நோக்குடன்தான் 1968-இல் சென்னை உலகத் தமிழ் மாநாட்டில் இவர்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையினை நாட்டுப் பாடல்களை அடிப்படைகளாகக் கொண்டு அரங்கேற்றினேன். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிலும் தனிப்பாடல்களை அடிப்படையாக வைத்து இவர்களின் துயரக்கதையை ஆய்வுக் கட்டுரையாக அமைத்தேன்.

ஈழத் தமிழர் விடிவுக்குத் தங்களைப் போன்றவர்கள் தமிழகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினரே உளர். இந்த நிலை மாறி—மாபெரும் ஆற்றலை உருவாக்கும் பணியில் தங்கள் தென்மொழி இதழுக்குப் பெருங்கடன் உள்ளது.

—க. நவசோதி. க.மு. கொழும்பு-13

தென்மொழி அன்பர்கள் கவனிக்க.

தென்மொழித் தொடர்பான இயக்க நடைமுறைகள், செயற்பாடுகள், இவற்றை முறைப்படுத்தவும், கட்டிக்காக்கவும், சட்டத் தொடர்பான வழக்கறிஞர் குழு ஒன்றையும் பொதுநலப் பணிகளில் ஈடுபட மருத்துவர் குழு ஒன்றையும், அமைக்க இருக்கின்றோம். இவற்றுள் உறுப்பினர்களாகித் தங்கட்கு வாய்ப்பான நேரங்களில் பணியாற்றவும் கருத்துரைகள் வழங்கவும் விரும்புகின்ற தென்மொழி அன்பர்களாகிய வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் தங்கள் விருப்பங்களுடன் முகவரிகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். —கோவன்.

செயலர், தென்மொழி இயக்கம், மே/பா. தென்மொழி, சென்னை-5.

என் இலங்கைச் செலவு.

—பெருஞ்சித்திரனார்.

5. திருச்சி புறப்பாடு.

தென்மொழிப் பணிகளை விட்டுவிட்டு நான் வெளியூர் புறப்படு கின்றேன் என்றாலே பலவகைச் சிக்கல்கள் முன்வந்து நிற்கும். அலுவலக அச்சக மேற்பார்வை, பணி தொடர்ந்து நடைபெற வேண்டிய வகையில் பொருள் துணை, கோப்புக்கு வேண்டிய கட்டுரைகள் எழுதிக் கொடுப்பது, பிறர் கட்டுரைகளைத் திருத்துவது, அவ்வப் பொழுது மெய்ப்புத் திருத்தம் போடுவது—இன்ன பிற அனைத்துப் பணிகளையும் ஒருவர் அலுவலகத்திலேயே இருந்து கவனிக்க வேண்டும். எழுத்துத் தொடர்பானவை அனைத்தையும் நான் ஊர் புறப்படு முன்னமே முனைந்து அணியப்படுத்திக் கொடுத்து விடுவேன் என்றாலும், அவை அச்சேறும் போது மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ள நல்ல ஆற்றல் உள்ளவர் ஒருவர் கட்டாயம் வேண்டும். பிற இதழ்கள் போல் அல்லாமல் தென்மொழிக்கு முழுக் கவனமும் செலுத்தும் திறனும் புலமையும் படைத்த ஒருவரே அவ்வாறு இயங்க முடியும். இல்லையானால் நான் ஊர் போய்த் திரும்பிவரும் வரை அச்சகம் அலுவலகம் மூடப்பட வேண்டும். நான் இலங்கை போனபொழுதும் பலவகையான ஏற்பாடுகளைச் செய்து விட்டுத்தான் போனேன். என் மக்கள் பூங்குன்றனும், பொழிலனும், எழுத்தர் இளமுருகனும் இக்கால் ஒருவாறு அச்சக, அலுவலகங்களைக் கவனித்துக் கொள்வார்கள் எனினும், மருமானார் புலவர். இறைக் குருவனாரையும், அவர் வேறோர் இடத்தில் பணியாற்றிக் கொண் டிருப்பினும், அடிக்கடி வந்து கவனித்துக் கொள்ளும்படி கூறினேன். இலங்கைச் செலவுத் தொடர்பான முயற்சிகளில் ஏற்கனவே அவர் சில நாள்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு என்னுடன் இருந்து ஒத்துழைத்தார்.

எல்லா முன்னேற்பாடுகளையும் முடித்துக் கொண்டு, 18-5-78 அன்று பிற்பகல் மாலை 3 மணியளவில் திருச்சிக்குப் புறப்பட்டேன். புலவர் இறைக்குருவனாரும் எழுத்தர் இளமுருகனும் பேருந்து வண்டி நிலையத்திற்கு வந்து வழியனுப்பினர். அன்று இரவு 1-15 மணியள வில் திருச்சி அரசினர் பேருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். அங்கு, நான் தெரிவித்திருந்த செய்திகளின்படி கோவை, தென்மொழி மறை நித்தலின்பனாரும், திருச்சி, மகிழ்நனும் வந்திருந்து. இரவு ஒரு தங்கும் விடுதியில் என்னைத் தங்கச் செய்தனர். இரவு 2 மணி யளவில் மகிழ்நன் வாங்கி வந்த சூடான இட்டளியும் தோசையும் பழமும் செலவுக்களைப்புக்கு மிகச் சுவையாகவும், ஆறுதலாகவும் இருந்தன. அவர் அன்புக்கு நன்றி கூறினேன்.

6. திருச்சி-யாழ்ப்பாண வானூர்திச் செலவு.

மறுநாள் 19-5-78 காலை 5 மணியளவில் எழுந்து, நீத்தலின்பனுருடனும் மகிழ்நனுடனும் 7½ மணியளவில் திருச்சி வானூர்தி நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு மகிழ்நன் குடும்பமும் அன்பர்கள் ஈகவரசன், முத்தையா, அழகரசன் முதலியோரும் என்னை வழியனுப்ப வந்திருந்தனர்.

சரியாக 10-15 மணிக்கு இலங்கை-யாழ்ப்பாண வானூர்தி ஓட்டத்திடலில் வந்து நின்றது. என் எல்லைக் கடவு, நுழைவு இசைவு, பெட்டி முதலியன ஆராயப்பெற்று வானூர்திக்குள் சென்றேன். 10-30 மணிக்கு வானூர்தி புறப்பட்டது.

இலங்கை—யாழ்ப்பாண ஓட்டத்திற்குரிய வானூர்தி மிகச் சிறியது. சிங்கை சென்ற வானூர்தியின் அளவில் நான்கைந்து மடங்கு சிறியது. 40 நிமையமே ஓட்டநேரம். வானூர்தி புறப்பட்டவுடன் மிகு உயரத்தில் பறக்காமல் ஓரளவு தாழ்வாகவே பறந்து சென்றதால்; திருச்சி, தஞ்சை மாவட்டங்களின் இயற்கை நில அமைப்புகளை நன்கு காணமுடிந்தது. சென்னையினின்று இலங்கை செல்லும் அன்பர் ஒருவர் என் அருகில் அமர்ந்திருந்தார். அவரும் இப்பொழுதான் முதல் முறையாக இலங்கை செல்வதாக அறிந்தேன். அவருடன் உரையாடிக் கொண்டே, கண்ணாடிப் பலகணி வழியாகக் கீழே கடந்து செல்லும் வயல்கள், காடுகள், நெடுஞ்சாலைகள், அகன்ற கிணறுகள், சிறுசிறு மேட்டு நிலங்கள்; ஆறுகள், ஏரிகள் முதலியவற்றை மிக நன்றாகப் பார்த்துக் கொண்டே சென்றேன். சிங்கை சென்றபொழுது, வானூர்தி மிக உயரத்தில் பறந்து சென்றதால், நில அமைப்புகளைப் பார்க்கவே முடியவில்லை. வெறும் நீல வானமும், வெண்மேகங்களும் மட்டுமே கண்களில் பட்டன. ஆனால், இக்கால் மிக உயரமான மலையின் மேல் ஏறி நின்று பார்ப்பதைப் போல், அவ்வளவு அழகாகவும் சிறிய அளவிலும் காட்சிகள் தெரிந்தன. வானூர்தி நில எல்லையைக் கடந்து கடல் எல்லைக்குள் பறந்து சென்ற பொழுது, கடலோரக் காட்சிகள் என் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தன. நிலத்தின் எல்லையோர மணற்பகுதியும், அதன் பின் கடலோரத்தின் ஆழங் குறைந்த நீர்ப் பகுதியும், அதன் வெளிர் நில நிறமும், அதன் பின் பரந்து கிடக்கும் கருநீல நீர்ப்படுகையும் மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சியை ஊட்டின.

உலக வரைபடத்தில் கொடுக்கப் பெற்ற வண்ண அமைப்புகள் போலவே, நில அமைப்பும் கடலின் நீல வண்ணமும் தோன்றின. கடல் அலைகள் நீண்ட வெள்ளை நெளிகோடுகள் போல் கரையை நோக்கி நகர்ந்து சென்ற காட்சியும், இடையிடையே தோன்றிய மணல்மேடுகளும், சிறு சிறு திட்டுகளும், மலையின் உச்சிப் பகுதிகளும் மிக நன்றாய்த் தெரிந்தன. இந்திய நாட்டு வரை படத்தில் தென்கிழக்குக் கடற்கரையின் எல்லைக் கோட்டின் நெளிவு சுழிவுகளை மிகத் தெளிவாக என்னால் பார்க்க முடிந்தது; அவற்றைக் கண்டு வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்தேன்.

அரைமணி நேரத்தின் அமைதியான வான்வழிச் செலவு முடிந்து வானூர்தி யாழ்ப்பாணத்தின் வடகரைப் பகுதியை வந்தடைந்த பொழுது, நீண்ட நெடிய தென்னை மரங்களும், கரையோரத்தின் கீற்று வேய்ந்த வீடுகளும் தோட்டப் பகுதிகளும் தெளிவாகத் தெரிய வந்தன. வீடுகளைச் சுற்றிச் சதுரஞ் சதுரமாகக் கட்டப் பெற்றிருந்த கீற்றுச் சுற்றடைப்புகள் வானூர்தி இறங்குவதற்கெனத் தாழ்வாகப் பறக்கையில் நன்கு தெரிந்தன.

7. பலாலி வானூர்தி நிலையத்தில் ஏற்பட்ட வருத்தம்

வானூர்தி சரியாக 11-10 மணிக்கு, யாழ்ப்பாணத்தின் பலாலி வானூர்தி நிலையத்தில் வந்து இறங்கியது. பலாலி வானூர்தி நிலையம் மிகமிகச் சிறிய நிலையம். நம் நாட்டில் உள்ள நடுத்தர நகர உந்து வண்டி நிலையம் போன்றது அது. ஆயத்துறையினரின் ஆய்வு, மருத்துவச் சான்றிதழ் ஆய்வு, பொருள்களின் நோட்டகம் எல்லாம் முடிந்து சரியாக 11-45 மணியளவில் நிலையத்திற்கு வெளியே வந்தேன். வெளியே. வானூர்தியிலிருந்து வருகின்றவர்களை வரவேற்க வந்திருந்த சிறு கூட்டத்தில், என்னை அழைத்துப்போக எவரேனும் வந்திருக்கின்றார்களா என்று பார்த்தேன். ஐயப்பட்ட சிலரிடம் உசாவினேன். ஆனால், அவ்வாறு ஒருவரும் வரவில்லை என்று தெரிந்த பொழுது என் மனம் மிகவும் வருந்தியது. ஒருவேளை நான் கொடுத்த தொலைவரி கிடைக்கவில்லையோ, மடல் கிடைத்திருக்காதோ என்று எண்ணி ஒருவாறு அமைவுபெற்றேன். இருப்பினும் கூட, நான் மாநாட்டிற்கென வந்திருக்க வேண்டிய வானூர்தி அதுதான். அதற்குப் பின் நான் வரவேண்டுமானால், அது மாநாட்டு நிகழ்ச்சி நாளைக் கடந்ததாகவே இருந்திருக்கும். எனவே, எவரேனும் வந்திருந்து, அந்த வானூர்தியைக் கட்டாயம் எதிர் கொண்டிருந்திருக்க வேண்டும். என்னை அழைத்திருந்தவர்களின் அக்கறையற்ற அந்தப் போக்கு அவர்கள் மேல் நான் கொண்டிருந்த மதிப்பைக் குறைத்தது.

ஆயினும், ஒருவாறு நான் மனந்தேறி, வானூர்தி அலுவலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்துடன் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ள இயலுமா என்று முயற்சி செய்து கொண்டிருந்தேன். இதற்குள் வானூர்தி நிலையத்தினின்று யாழ்ப்பாணம் புறப்படும், வானூர்தி நிலைய மூடுவண்டி நகருக்குப் புறப்பட அணியமாயிருந்தது. என்னிடம் வெளிநாட்டுச் செலாவணிக்குரிய தொகை சிறிதும் இல்லை. சென்னைச் சேம வைப்பகத்தில் (Reserve Bank) அதுபற்றிக் கேட்டபொழுது, அது தொடர்பாகச் சில சிக்கல்கள் எழுந்ததால், 'என்னை அழைப்பவர்கள் இலக்கிய நிகழ்ச்சியின் பொருட்டாகவே அழைப்பதால், உணவு, தங்குமிட ஏந்துகள் போக்குவரத்து அனைத்தையும் அவர்களே கவனித்துக் கொள்வார்களாகையால், எனக்கு வெளிநாட்டுச் செலாவணிக்குரிய தொகை யெதுவும் தேவையில்லை' என்று சொல்லிவிட்டேன். அதனால் காலத்தாழ்த்தம் நேரும் பல சிக்கல்கள் தவிர்ந்தன. குறிப்பிட்ட நாளில் அதுவும் இறுதி நேரத்தில் நான் செலவு மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அதுபற்றிக் கவலைப்படவில்லை. மேலும் என்னை

அழைத்துப் போக எவரேனும் ஊர்தி நிலயத்திற்கு வருவார்கள் என்று நம்பியிருந்ததால், எனக்கு எதன் பொருட்டாகவும் தொகை தேவை யிராது என்றே கருதியிருந்தேன். ஆனால் அவர்கள் எவரும் வராமற் போகவே, நான் பலாலி நிலயத்திலிருந்து நகரம் போவதற்குச் சிறிது தொகை தேவையாக இருந்தது. அதை எவரிடம் கேட்பது என்று தயங்கி விழித்துக் கொண்டிருந்தேன். என்னுடன் வானூர்தியில் வந்த சென்னை அன்பரிடம் செலாவணிக்குரிய ஒரு குறிப்பிட்ட தொகையிருந்தது. அதை அவர் இலங்கைப் பணமாக மாற்றிக் கொண்டார். எனவே, அவரிடம் சென்று, நிலைகளைக்கூறி, நகரம் செல்வதற்கான மூடுவண்டிக்குரிய என் கட்டணத்தையும் அவரையே தந்து விடுமாறு கேட்டுக் கொண்டேன். அவர் என் நிலைக்குப் பெரிதும் வருந்தியும், என்னை அழைத்துப்போக வராதவர்களின் அன்பும் அக்கறையும் பொறுப்புமற்ற நிலைக்காகச் சினந்தும், மிக ஆர்வத்துடன் எனக்குரிய கட்டணத்தையும் அவரே கொடுத்ததுடன், மேலும் தொகை தேவைப்படுமானாலும் தாமே தருவதாகவும் இசைந்தார். அவரின் பண்பும் அன்பும் தோய்ந்த தன்மை என்னை மிகவும் மகிழ்வும் நன்றியும் கொள்ளச் செய்தது.

இந்நிலையில், எங்கள் வானூர்தியை அடுத்துக் கொழும்பிலிருந்து வந்த வானூர்தியில் வந்திறங்கிய ஒரு நடுத்தரக் குடும்பம் ஒன்றும் எங்களுடன் மூடுவண்டியுள் ஏறவந்தது. அக் குடும்பத்தின் தலைவர் நான் தமிழகத்தைச் சேர்ந்தவரென்று தெரிந்தும், நான் படும் தொல்லைகளை உணர்ந்தும் என் அருகில் வந்து என்னைப் பற்றிய விளக்கம் கேட்டார். அதனை நான் சொன்னவுடன், 'ஐயா, உங்களை எனக்கு மிக நன்றாகத் தெரியுமே! நான் தென்மொழியன்பன், என் பெயர் சிறீக் கந்தராசா. நான் 1960–63-ஆம் ஆண்டுகளில் திருச்சி வளவர் கல்லூரியில் திரு. சாத்தையா (தமிழ்க்குடிமகன்) உடன் படித்தவன். தொடர்ந்து தென்மொழியையும் தமிழ்ச்சிட்டையும் படித்து வருபவன். நான் இப்பொழுது கொழும்புவில் சட்டத்துறை வரைவாளர் அலுவலகத்தில் பணியாற்றுகிறேன். என் மாமனார் புலவர் வேலன் என்பார், யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பணியாற்றுகிறார். அவரும் நெடுநாளைய தென்மொழி அன்பர். என் மனைவியும் திருச்சியில் படித்தவர். அவரும் தமிழ் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். நாங்கள் கொழும்புவிலிருந்து விடுமுறை நாள்களில் இங்கு வந்து விடுவோம். வாருங்கள் நம் வீட்டிற்குப்போகலாம். என் மாமனார் உங்களைப் பார்த்தால் மிகவும் மகிழ்வார். நம் வீட்டிற்குப் போனவுடன் பண்டிதர் அவர்களுக்குத் தொலைபேசி வழியாகத் தங்கள் வரவைத் தெரிவித்து, அழைத்துப் போக ஏற்பாடு செய்வோம்' என்று மிக்க அன்புடன் கூறினார். திக்குத் திசை தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த எனக்குத் தென்மொழி அன்பர் ஒருவரே துணையாக வந்துசேர்ந்தவுடன் பெருமகிழ்ச்சியாகவும் இருந்தது. எனவே, அனைவரும் மூடுவண்டியுள் ஏறி அமர்ந்தோம். எங்களோடு அயல்நாட்டைச் சேர்ந்த ஐவர் கொண்ட ஓர் இப்பிக் கூட்டமும் வண்டியுள் ஏறியது. வண்டி யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டது.

(தொடரும்)

வெள்ளைச்சாமி- கருப்பாயம்மாள் சிறுகதைப் போட்டி

தென்மொழியின் வளர்ச்சியை வேண்டி, சிங்கையில் உள்ள தென்மொழி அன்பரும், பல கல்வி நிறுவனங்களின் உரிமையாளரு மாகிய சிங்கப்பூர், உயர்திரு. திருவாட்டி. வெ. கோவிளங் கண்ணன் (கோபாலகிருட்டிணன்) அவர்கள், ஒரு சிறுகதைப் போட்டியைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டுள்ளனர். போட்டிக் கான நடைமுறைக் கடைப் பிடிப்புகள் பின்வருமாறு:

(1) இச் சிறுகதைப் போட்டி தென்மொழி வளர்ச்சிக்கென நடத்தப் பெறுகிறது எனினும், அதே பொழுதில் தூய தமிழில் சிறுகதை எழுதும் திறமையை வளர்த்தலே இதன் தலையாய நோக்கமாகும்.

(2) மூன்று மாதங்களுக்கொரு முறை இப்போட்டி நடத்தப்பெறும்

(3) சிறுகதை தென்மொழி அளவில் 4 பக்கத்திற்குக் குறை யாமலும் 6 பக்கங்களுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

(4) சிறுகதைகள் அனைத்தும் பிறசொற் கலப்பின்றித் தூய தமிழில், எழுதப் பெறுதல் வேண்டும். கதைபுறுப்பினர் உரை யாடல்களில் பேச்சுத்தமிழ் வழங்கினாலும் அவற்றிலும் தூய தமிழைக் கையாளுதல் வேண்டும்.

(5) ஒருவர் ஒரு போட்டிக்கு எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு கதையுடனும், தென்மொழியில் வெளியிடப் பெறும் நுழைவுப் படிவத்தை நிரப்பியனுப்புவதுடன், போட்டியின் நுழைவுக் கட்டணமாக 'ஆசிரியர் தென் மொழி, சென்னை-5' என்னும் முகவரியிட்ட ஓர் உருபா அஞ்சற் காசோலை (Postal Order) ஒன்றும் இணைக்கப் பெறுதல் வேண்டும்.

(6) பரிசுக்குரிய சிறுகதைகளைத் தென்மொழிச் சார்பில் மூவர் அடங்கிய தேர்வுக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கும். தேர்வுக்குழுவில் அடங்கியவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது.

(7) முதற் பரிசுத் தொகை: உருபா 500
இரண்டாம் பரிசுத் தொகை: உருபா 250
மூன்றும் பரிசுத் தொகை: உருபா 150

(8) பரிசுபெற்ற மூன்று கதைகளும் தொடர்ந்து தென்மொழியில் வெளியிடப்பெறும். முதற்பரிசுக்கதை வெளியாகும் அதே இதழில் அடுத்த போட்டிக்கான நுழைவுப்படிவம் இணைக்கப் பெற்றிருக்கும்.

(9) நான்கு போட்டிகளுக்கு ஒருமுறை சென்னையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிலேயே பரிசுகள் வழங்கப்பெறும். பரிசுத் தொகையுடன் தென்மொழிச் சார்பாக நற்சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பெறும். பரிசு பெற்றவரின் படமும் சிறு வரலாற்றுக் குறிப்பும் பரிசுக் கதையுடன் வெளியிடப்பெறும்.

(10) பரிசுக்குரிய மூவர் தேர்ந்தெடுக்கப் பெற்றபின் அவர்களிட மிருந்து ஒளிப்படமும், சிறு வரலாற்றுக் குறிப்பும் அஞ்சல் வழியாகப் பெற்றுக் கொள்ளப் பெறும். ஆகையால், அவற்றை எவரும் முன் கூட்டியே சிறுகதைகளுடன் அனுப்பி வைக்க வேண்டா.

(11) பரிசு பெற்ற அனைத்துச் சிறுகதைகளையும் தொகுத்து நூலாக வெளியிடப்பெறும் முதல் வெளியீட்டுரிமை தென்மொழியைச் சாரும். அதற்கடுத்த வெளியீட்டுரிமையும், கதை வெளிவந்த மூன்றாண்டிற்குள் தென்மொழியால் வெளியிடப்பெறாத கதை களின் முதல் வெளியீட்டுரிமையும் கதையாசிரியர்களையே சாரும்.

(12) முதல் சிறுகதைப் போட்டிக்கான நுழைவுப் படிவம் அடுத்த மாத (சுவடி: 15 ஓலை: 3) இதழுடன் வெளியிடப்பெறும்.

(13) பரிசுப் போட்டியில் கலந்து கொள்வதற்குரிய அனைத்துக் கதைகளும் பதிவஞ்சல் வழி "ஆசிரியர், தென்மொழி, சென்னை-5" என்னும் முகவரிக்கே அனுப்பப் பெறுதல் வேண்டும்.

(14) இப்போட்டித் தொடர்பாக ஏற்படும் அனைத்துச் சிக்கல்களுக்கும் தென்மொழி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

(15) இப்போட்டி பற்றிய விளம்பரங்களும், போட்டி முடிவுகளும் முகாமையான உள்நாட்டு, வெளிநாட்டு நாளிதழ்களில் வெளியிடப் பெறும்.

(16) உலக அனைத்து நாடுகளிலுமுள்ள தமிழ் எழுத்தாளர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

சென்னை-5,
31—8—78.

—ஆசிரியர்
தென்மொழி

வேண்டுமா, வேண்டாமா?

—செம்பியன் வல்லத்தரசு

இந்திய விடுதலைப் போராட்டம் சூடுபிடித்திருந்த சென்ற நூற்றாண்டின் இறுதியில், நெல்லை ஆற்றங்கரையில் தமிழறிவும் நெஞ்சுரமும் கொண்ட வ.உ. சிதம்பரனார், கா. சுப்பிரமணியனார்; வெள்ளக்கால் சுப்பிரமணியனார் போன்றோரால், தமிழர் நலக் காப்பியக்கம் தொடங்கப் பெற்றுத் தமிழின் தனிச் சிறப்புகளும் தமிழன் மேன்மையும் இனவுணர்வும் விளக்கப் பெற்று வளர்க்கப் பட்டும்; தனித் தமிழ்த்தந்தை மறைமலையடிகளாரால் ஆராய்ச்சி முறையில் மாற்றார் சூழ்ச்சிகள் தூளாகும்படி அவை நிறுவப்பட்டும், தமிழர்களின் அறியாமையினாலும் சோம்பலாலும், அணுஊழி என்றும் அறிவியற் காலம் என்றும் புகழும் இவ்விருபதாம் நூற்றாண்டிறுதியிலும், தமிழின் பெருமையும் உயர்வும் மாற்றாரால் திட்டமிட்டு நயமாக மறைக்கவும், நசுக்கவும், ஒடுக்கவுமான முயற்சிகள் பல் துறைகளிலும் ஊக்கமுடனும் தக்க துணைகளுடனும் நடைபெறுகின்றன என்பதற்கான சான்றுகள் நாளும் கிடைக்கின்றன. அடடா, என்னே அவர்தம் துணிவும் முயற்சியும்.

காட்டாக, அண்மையில் ஓர் ஆங்கில நாளிதழில் வெளிவந்த (Hindu 9-4-78) சோவியத்து அறிஞர் நிகிதாகுரோவ் என்பவருடன் தமிழ்நாடு தொல்லியல் துறைத் தலைவர் பர். இரா. நாகசாமி நடத்திய நேருரையாட்டு சில எண்ணங்களைக் கிளப்புகின்றது. சிந்து வெளி நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று தந்தை ஈராசுவிலிருந்து பின்லாந்து வரை அறிஞர் பர்போலா வரை அறிவியல் முறைப்படி ஆய்ந்து இருந்தும், மேற்கண்ட சோவியத்து அறிஞரின் கருத்தும் அதுவேயாயிருந்தும், நம் நாகசாமிக்கு மட்டும் இன்னும் ஐயம் தீரவில்லை போலிருக்கிறது.

'சிந்துவெளி நாகரிகம் யாருடையதா யிருக்கும்? என்கிறார் சோவியத்து அறிஞர் 'ஐயமின்றி அது திராவிட நாகரிகம்தான் என்கிறார். பின் இவர், எசு. ஆர். இராவ் என்பார் அது இந்தோ ஆரிய நாகரிகம் என்கிறாரே' என்று இழுக்கிறார். அறிஞர் அதை மறுக்கிறார். சிந்துவெளி எழுத்துகள் திராவிடக் கூறுடையன என்னும் அறிஞரிடம், இவர் ஆசிரியர் இராமச்சந்திரன் என்பார் அவற்றிற்கு வேதக் கருத்துகளை பொருத்துவதாகக் கூறி, அதற்கு மறுப்புக் கூற வாய்ப்பின்றி வேறு வினாக் கிளப்புகிறார். பின் மீண்டும் இவர் ஆசிரியரின் ஆரியச்சார்பான கருத்துகளைக் கூற, அவர் மறுக்கிறார். பின் தொடர்பின்றி, அறிஞர் கமில் சுவலபில், 'சிவா' என்னும் சொல் தமிழ் –சிவ், சிவ (செம்மை) என்னும் மூலத்தையுடையதன்று என்கிறாரே

என்கிறார். 'சிந்து நாகரிகம் இந்தோ- உக்ரேனியத்துடனுவது தொடர்புடையதா' என்கிறார். என்னே இவர் தம் நுண்மாண் நுழை புலம்! தலைப்புக் கேள்விகளாகக் கேட்டு சோவியத்து அறிஞரைத் தம்மிடம் இழுக்கவும், இயலாதபோது தம் ஆரியச் சார்பான கருத்து களைத் திணிப்பதிலும் கவனமுடன் இருக்கிறார். அவ்வறிஞரின் பேச்சிலும் தெலுங்கு மொழியை எடுத்தாளும் அளவு தமிழ் மொழி பற்றிக் காணேம். சரியான வழிகாட்டிகளும் முறையான செலவும் இல்லாமைதான். கட்டுச் சோற்று மூட்டைக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டியது போல, தமிழின் பெருமையைக் காட்டத் துணைபுரி யும் தொல்லியல் துறை போன்றவற்றில் இப்படிப்பட்ட 'பெருமக்கள்' தலைமை இருப்பது நம்மை நாமே புதைத்துக் கொள்வது போன்றதே. என் கல்லூரி நாட்களில் மொழி ஞாயிறு பாவாணரின் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்' வெளிவந்த காலை விற்பனைக்குக் கொண்டு சென்ற போது 'யார் இந்தப் பாவாணர்?' என்று கேட்டார் ஒரு பேராசிரியர். இன்றும் தம் ஆய்வு நூல்களில் பாவாணரின் பெயரை மறந்தும் எவ்விடத்தும் குறிப்பிடாமல் மிகக் கவனமாக இருக்கிறார்கள். இவர்கள் தாமே வெளி நாட்டு அறிஞர்க்குத் தமிழையும் தமிழரையும் இதுவென்றும் இன்னாரென்றும் காட்டுபவர்கள். பின் அவர்களைக் குறைகூற என்ன இருக்கிறது?

இஃது ஒன்றுதானா, இங்குமட்டும்தானா இந்நிலை? 'தொல்காப்பியம்' கற்காமல் முதுகலை தேறி, நற்றிணையில் நட்டுவாக்காலி பற்றி ஆய்ந்தும், 'இழுத்துக் கொண்டா, இஸ்த்துகினு' என்பது பற்றிச் 'சொல் லாராய்ச்சி' செய்தும் 'கலாநிதி' ஆகித் தங்கள் அறியாமையையே அறிவாகக் கொண்டு ஆய்வுலகில் வலம்வரும் நம்மவரும், எப்படி யாவது தமிழின் நிலையினை வடமொழிக்கு ஒரு படி கீழே வைத்து விட்டால் தம் வாழ்க்கை 'பூரண'மாகிவிடும் என்று அலையும் 'மேன் மக்கள்' கூட்டமும் அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்திருக்கின்றன. அவர்தம் அறியாமைக்கும் சூழ்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து பதவிகளும் பட்டங்களும் வீசி வளர்க்கின்றன அவர் கூட்டமும் அவர் தம் கருவியாம் நடுவண் அரசும்.

ஏன் இந்நிலை? இந்நிலை மாறுமா? மாறத்தான் வேண்டும். இல்லை யெனில் தமிழின் தகுதியும் சிறப்பும் அதிகார நடுவங்களால் முடிவு செய்யப்பெறும். கமுக்கமாகச் செயல்படும் நச்சுயிரிகளைப் போல, மொழி வீழ்ச்சிக்கும் இன அழிவுக்கும் மேற்சொன்ன கூட்டமும் இதற்கு வழிவகுத்துத் துணைபோகும். பொதுமொழியாம் உருசிய மொழி மட்டுமின்றி, தம் குடியரசைச் சார்ந்த அனைத்து மொழிகளும் அவை

சார்ந்த பண்பாடுகளும் நிகரான வளர்ச்சிபெற முழு ஊக்கமும் ஆக்கமும் தருவதனால் மட்டுமே சோவியத்து ஒன்றியத்தில் மொழிச் சிக்கல் தவிர்க்கப் பட்டது. அங்கு எழுத்தற்ற மொழிகள் கூட அறிவியல் மொழியளவு வளர்க்கப் பட்டன. ஆனால் இங்கோ, பொதுமொழி என்ற பெயரில் இந்திக்கும் பண்பாட்டு மொழி எனும் பெயரில் சமற்கிருதத்திற்கும் வளர்ச்சித் தொகைகளாகக் கோடிக் கணக்கில் கொட்டப் படுகின்றன. மாநில மொழிகள் நிழல் தட்டிய செடிகளைப் போல வளர்ச்சிக்கு வழியின்றி முடங்குகின்றன. இனவுணர்வும் பண்பாட்டு வளர்ச்சியும், தடைப்படுகின்றன.

இதை நாம் சொன்னால் நம்மை 'ஆட்டுப் பார்வை' பார்க்கும் 'மேதைகள்', கனடா நாட்டில் இச் சிக்கல் வெடித்திருப்பதைக் காணத் தவறுவதேன்? அங்கு ஆங்கிலம், பிரெஞ்சு என்று இருமொழி பேசும் மக்களுக்கிடையே, பிரெஞ்சு மொழிக்கு உரிய இடம் தரப்பட வில்லையென்றும், அம்மொழி பேசும் மக்களின் பண்பாடு போற்றப் படவில்லையென்றும், ஆங்கிலமே எங்கும் திணிக்கப் படுகிறது என்றும் வெகுண்டெழுந்த பிரெஞ்சு மொழி பேசும் மக்கள், கனடா நாட்டில் ஒரு பகுதியினைத் தங்களுக் குரிய தனி நாடாக்கப் போராடுகின்றனர். அங்கு மட்டுமா, இங்கே இலங்கைத் தீவினிலே காடு திருத்திக் கழனியாக்கிப் பொன் விளைத்துக் கூழுக்கலையும் தமிழர்களும், தமிழும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப் பட்டதோடன்றி அவர்களை நாட்டை விட்டே விரட்டும் எண்ணத்தில் சிங்களர் இனப்போர் தொடுத்து விட்டனர். எனவே, 'ஈழத்துத் தமிழ்ப் புலிகள்' தமிழ் மொழி ஏற்றம் பெறவும், தமிழினம் மானத்துடன் வாழவும் 'தமிழ் ஈழம்' காண எழுந்து, வெளிக் கடைச் சிறையிலும் அடர் காடுகளிலும் குருதி மழை பெய்து ஈழ மண்ணைச் சிவப்பாக்குகின்றனர். இட்லரால் வேட்டையாடப்பட்டு இருக்க இடமின்றி உலகு முழுவதும் சிதறிக் கிடந்த 'யூதர்' இன்று 'இசுரேல்' என்ற தம் நாட்டை நிறுவி, அழிந்து போன எழுத்தற்ற தம் 'ஈபுரு' மொழியை அறிவியல் மொழியளவு உயர்த்தி விட்டனர். ஆனால் என்ன கொடுமை! அன்று யூதர் ஓரிடம் தேடி அலைந்தது போல் இன்று பாலத்தீனியர் ஒரு நாடமைக்கும் முயற்சிக்கு அமெரிக்க வல்லாண்மையன் ஏவலால் தடைபோடும் இவர்கள் செயலை என்னவென்பது?

'தேசிய' மயக்கத்தில் ஒற்றுமை பேசும் இனவுணர்வு கெட்ட முனிவர்கள், தங்கள் வீடுகளுக்குக் கதவு வைத்துக் கொள்வதேனோ? 'தமிழன்' என்று சொன்னால் அது பிற்போக்கு? ஆனால் சாதி குலங்களை மட்டும் பன்றி மலத்தைப் பற்றுவது போல் போற்றிக் கொள்வான்.

அது எந்தப் போக்கு? மொழி நலத்துக்காக நாட்டைப் பிரிப்பது பாதுகாப்பு, பொருளியல் வீழ்ச்சியில் முடியுமே; மொழி உரிமையைப் போராடிப் பெற வேண்டியதுதானே? என்பார். விடுதலை பெற்று முப்பதாண்டுகளில் நடுவண் அரசு நேர்மையாகச் செய்ய வேண்டியதைச் செய்ததா? செய்கிறதா? மக்கள்தான் கேட்கிறார்களா? இல்லை ஏன்? சோற்றுக்கே ஏதிலிகளாய் அலையும் போது, அவர்களுக்குத் தம் மொழிப் பெருமையும் தம் சீரும் தெரியுமா? இதை எழுதும் நானோ, படிக்கும் நீங்களோ மட்டும் அவற்றை உணர்ந்தால் போதாது. ஒவ்வோர் ஏழைத் தமிழனும் வளர வேண்டும். அந்த இடைவெளி சிதைய இங்கே ஒரு பொருளியல் விடுதலையும் அது சார்ந்த பண்பாட்டு விடுதலையும் மலர வேண்டும். அதற்கு இங்கே பொதுவுடைமை பூக்க வேண்டும். அதுதான் ஒரே வழி.

சீனு. ஒன்றிய நாடுகள் அவையில் நுழையுமுன் சீனக் குடியரசாக ஒப்புக் கொள்ளப்பட்டுப், பின் அமெரிக்காவால் கைவிடப்பட்டு, அவையிலிருந்து உதைத்து வெளியேற்றப் பட்ட சியாங்கே சேக்கின் ‘தைவான்’ என்ற சிறு தீவு ஆசியாவிலேயே வாழ்க்கைத்தரம் சிறந்த நாடாகத் திகழ்கிறது. அமெரிக்க வல்லாண்மைக்குச் சூள் உரைத்துக் கொண்டும் போர்க் குரல் எழுப்பிக் கொண்டும் அதன் அண்மையிலேயே அமைந்து பொதுவுடைமைப் பண்பாடும் காசிட்டிரோவின் கியூபாவும் சிறு தீவே. மிகச் சிறிய நாடான சுவிட்சர்லாந்து மிகப் பெரிய இந்தியத் துணைக் கண்டத்திற்குக் கடந்த பத்தாண்டுகளில் நூற்றுமுப்பது கோடி உருபாக்கள் உதவியளித்திருக்கிறது. ‘அயர்லாந்துக் குடியரசு’ என்பது ஆங்கில வல்லாண்மையிலிருந்து விடுபட்ட அயர்லாந்தின் ஒரு பகுதியே. இப்படி எத்தனையோ சிறு நாடுகள் வளர்முனையில் இருக்கின்றன. மேலும் உலகின் மூன்றில் இரு பங்கு பொதுவுடைமை நாடுகளே. பொதுவுடைமைதான் இயல்பானதும், அமைய வேண்டிய உண்மை நிலையுமாம்.

திருவள்ளுவரிலிருந்து பாவேந்தர் பாரதிதாசன் வரை கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழின் உயர்வும் தமிழனின் சிறப்பும் பொதுமை அமைப்பின் தேவையும் பற்றிப் போதும் எனும் அளவு சொல்லியாகி விட்டது. ‘தேசியம்’ பேசிய தமிழ்த் தென்றல் திரு. வி. க தம் இறுதி நாட்களில் தமிழ்நாட்டுப் பிரிவினையை வரவேற்றுப் பேசினார் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் கருத்தும் அஃதே. அப்பெருந் தலைவர்களை இறுதி நாட்களில் சோற்றுக்குக் கடுகு. மிளகு வாணிகம் செய்பவர்களாக்கியும், ஏதிலிகளாகவும் சாகடித்த ‘தன் மானத்-தமிழர் தாம் நாம். எனவே; நாம் நம்மை உணர்ந்து ஒன்று



அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு.

நூல்: **மொழி உரிமை.**

ஆசிரியர்: கு.வெ கிருட்டிணசாமி ஆசான் க.மு.(பொருளியல்) க.மு. (அரசியல்), க.மு. (வரலாறு), க.மு. (மெய்யறிவு), ச.இ.

பதிப்பு: **பூங்குன்றன் பதிப்பகம்,**
6, திருவேங்கடம் தெரு, வடகோவை-கோவை, **641002.**

விலை: உருபா. 2/— 67.பக்கம்:

தமிழர் யாவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் கு.வெ.கி. ஆசான் எழுதிய 'மொழி உரிமை' யாகும்.

உணர்ச்சிக்கு ஆட்படாமல் நேர்மையோடும் நடுநிலையோடும் அறிவியல் நெறியோடும் நம் நாட்டு மொழிச் சிக்கலின் வேர் முதல் உச்சி விளார் வரை விரிவாக ஆய்ந்து தக்க முடிபும் வரையறுத்துள்ளார் ஆசான்.

பதினேழு தலைப்பும் Hindi Imperialism என்னும் ஆங்கில இணைப்பும் சோர்வு தட்டாத சுவை மிக்க உயிரோட்டமான நடையில் எழுதப்பட்டிருப்பது ஆசிரியரின் எழுத்தாற்றலுக்கு ஏற்ற எடுத்துக் காட்டாகும்.

ஆசிரியர், ஆங்காங்குப் பிறமொழிச் சொற்களைக் கலந்தெழுதுவதை இனி வரும் நூல்களிற் குறைத்துக்

(முன்பக்கத் தொடர்ச்சி)

பட்டுப் போராடி மேன்மையடைவதை நம் கடமையாகவும் உயிர் மூச்சாகவும் கொள்வோம். இந்த வரலாற்றுப் பின்னணியையெல்லாம் மனத்தில் கொண்டு இப்போது கேட்கிறேன்.

தமிழே உலகின் உயர்தனிச் செம்மொழி என்பதை உலகம் உணர வேண்டுமோ வேண்டாமா? தமிழன் தன் பெருமையைத் தானும் உணர்ந்து உலகுக்கும் உணர்த்த வேண்டுமோ வேண்டுமா? பொதுவுடைமைப் பூங்காவில் எதிர்காலத் தமிழ்மக்கள் எல்லாரும் நிகரெனக் களித்து விளையாட வேண்டுமா, வேண்டாமா? இன்றைய அரசியல் அமைப்பில் இவற்றிக்குத் தீர்வு கிட்டாத நிலையில், தமிழ் நாடு, தனி நாடாக வேண்டுமோ, வேண்டாமா?

கொள்ளல் இன்றியமையாததாகும்.

பிற இந்தியத் தாய் மொழியினருக்கும் தமிழைத் தாய் மொழியாகப் பெற்ற தமிழருக்கும் இருக்கும் மொழியுணர்வு-விடுதலையுணர்வுக்குரிய கரணியத்தை ஆசிரியர் அருமையாக விளக்கியுள்ளார்.

"இந்தி மொழி யல்லாத மாநிலங்களிலும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு, இன்று இல்லையேல் நாளை நிச்சயம் வளரும் என்பதை உணர்வோம்." (ப: 16)

"உரிமை வேட்கையும், விழிப்புணர்வும் உள்ள சமூதாயம், மேலாண்மை எந்த வடிவில் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடும்." (ப: 16)

இந்திய அரசியல் சட்டத்தில் ஆட்சி மொழிபற்றிய 17ஆம் பகுதியில் கேடு தருந்தன்மையை நன்கு ஆய்ந்து அதனை ஒழித்தல் வேண்டுமென்கிறார் ஆசான். 'சரத்து (16) 2 பகுதியில் மொழியுரிமை மறுக்கப் பட்டு இந்தி மேலாண்மை' திணிக்கப் படுவதை அருமையாக ஆய்ந்து விளக்கியுள்ளார்.

"உழவர், தொழிலாளர், மற்றுமுள்ள பொது மக்கள் ஆகிய அனைவரும் மொழியுரிமை இயக்கத்திற்குத் துணை நிற்க வேண்டும்." (ப: 58)

"மொழியுரிமை நலத்தையும், பொருள் நலத்தையும் காக்க வேண்டிய இளைஞர்கள் தங்களைப் பொறுமையோடு ஆனால் பெருமை தரும் வகையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்." (ப:59)

—என ஆசிரியர் உணர்த்துமிடங்கள் அருமை. தமிழகம் எங்கும் இந்நூல் பரவி மொழியுரிமை உணர்வை ஊட்டுதல் இன்றியமையாததாகும்.

—திண்டிவனத்தான்.

'வைகை'யா 'வையை'யா?

கழகப் புலவர்கள் பாடித் தொகுத்த எட்டுத் தொகை, பத்துப் பாட்டு முதலியவற்றிலும், சிலப்பதிகாரம் முதலியவற்றிலும், இவ்வியாறு பல விடங்களில் கூறப் படுகின்றது. பரிபாடலில் இதற்கென்றே பல பாட்டுக்களுள. எவ்விடத்தும் வையை என்னும் பெயரே காணப்படுவது. வைகை என்று ஓரிடத்தும் வழங்கப் படவில்லை. பழைய தமிழ் வழக்குகளை அறியாமலோ, வடமொழியில் எழுத நேர்ந்தமை முதலிய காரணங்களாலோ பிற்காலத்தார் சிலர் சில தமிழ்ப் பெயர்களைத் திரித்து வழங்குவாரும்; அங்ஙனம் திரிக்கப் பட்டோ அன்றி மருவியோ வழங்கும் பெயர்களுக் கேற்பக் கதைகள் கட்டிக் கூறுவாரும் ஆயினர். 'பொதியில்' என்னும் தமிழ்ச் சொல்லைப் 'பொதிகை' என்று திரித்து வழங்குதலும் காண்க. இவ்வாற்றால், பழைய தமிழ் வழக்குடன் பொருந்த வையை என்று கூறுவதே சாலவும் பொருத்தம் உடைத்து.

—ந.மு.வே.

புதுச்சேரியில் இதுவரை தாங்கள் நிகழ்த்தியவற்றைவிடச் சிறப்பாக இருந்தது. இலங்கைச் சுற்றுப்போக்கின் பயனை உரையில் கண்டேன். தமிழினம் அழிவு நோய்களால் பற்றப் பட்டிருக்கிறது என்பதை நன்குணர்ந்து மிகவும் அக்கறையுடனும் கவலையுடனும் உணர்த்து கிறவர் வேறு யாரையுங் காண்டலரிது. துணிச்சலான, இதுபோன்ற பிற கருத்துகளையும் தமிழ் நில முழுதும் தாங்கள் முழங்கவேண்டும். தமிழ் இளைஞர்களை இப்போதுதான் செயல்படுமாறு சொற்பொழிவின் மூலம் உணர்த்தியிருக்கிறீர்கள். நன்றி! "நோயாளிகளை நாடி வீடு தோறும் மருத்துவர் செல்லவேண்டும்; அதுபோல் நம் அன்பர்கள், வீடுவீடாகச்சென்று தனித்தனியாகச் சந்தித்துக் கருத்துகளை எடுத்துச் சொல்லுங்கள்" என்று தாங்கள் கூறியதை நம்மவர்கள் மறப்பா ராயின் அவர்களைத் தனித்தமிழன்பர்கள் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. —க. தமிழமல்லன். புதுவை-9.

0:598, அன்புப் பெருந்தகையீர், வணக்கம். தாங்கள் தமிழீழத்திற்குச் சென்றதும், அங்குக் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பற்றியும் ஈழ ஏடான "சுதந்திரனில்" படித்தேன். தென்மொழி வாயி லாகவும் அறிந்தேன். தமிழீழத்தில் தாங்களாற்றிய சொற்பெருக்கினைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்கவில்லையெனினும், சுதந்திரன் தொடர்ந்து வெளியிடுவதால் படித்து அறிய முடிகிறது. இழந்த தமிழ் நிலங்களை மீட்டிட இழந்த உணர்வுகளை முதலில் பெறவேண்டும் என்ற சொற்கள் ஈழத்தில் கூறியதைக் காட்டிலும் மான உணர்வே இல்லாமல் நத்திப் பிழைப்பதில் இன்பம் காணும் இத்தமிழக ம(ா)க்களிடம் கூறியிருப்பின் மிகப் பொருத்தம்; கிஞ்சிற்றும் தமிழர் என்ற உணர்வும்—தமிழ் என்ற நினைவும் இன்றி மாற்றாரின் கால் நக்கி வாழ்ந்துவருவோரின் உள்ளங் களில் தமிழ் உணர்வு ஊட்டுவதே நம்முன் இருக்கும் முதன்மைப் பணி யாகும். தமிழகத்தைக் காட்டிலும் ஆயிரம்படிகள் முன்னேறியுள்ளனர் ஈழத்தமிழர்கள். தம் இனத்தைக் காக்க வேண்டும் என்ற உணர்வு அங்கிருக்கும் ஒவ்வொருவர் நெஞ்சிலும்—குருதியிலும் ஆழப் பதிந் துள்ளது.

தங்களின் மேடைப் பேச்சுகளாலும்—எழுத்துகளாலும் தமிழகத்தில் ஒரு கூட்டத்தையே—சுண்டுவிரல் அசைவிலே ஆட்டி வைத்த தலைவர்கள் இருந்தும்—அவர்கள் ஏனோ வடவர்களின் கண்ணசைவிற்குக் காத்திருப்பவர்களாகவே காலத்தை ஓட்டினர். தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கிய மறைமலையடிகளாரும்; தமிழ் உணர்வினைத் தட்டியெழுப்பிய திரு.வி.க அவர்களும் தமிழ் அறிஞர்கள் என்ற உயர்நிலையில் இருந்தார்களேயன்றி—மக்களிடையே ஈடுபாடு பெற்றவர்களாகவோ, மக்களைத் தம் வழியில் அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவர்களாகவோ இருக்கவில்லை. அதனால்தான் அவர் களால் உணர்ச்சிமிக்க—விடுதலை வேட்கை மிக்க—மக்களை உருவாக்க முடியவில்லை.

"பதியெழுவறியாப் பழங்குடி" என்று மிகப்பெருமையாகச் சொல்லப்பட்ட நம்குடி இன்று கால்பதித்து நிலைத்திருக்க உரிமை யுடைய சொந்தமண் என்று சொல்ல முடியாத நிலைக்குத் தாழ்ந்திருக் கிறோம். வெள்ளையர்களிடம் அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து நீங்கி இன்றைக்குத் தில்லிவாழ் இந்திக்காரர்கட்கு அடிமையராக இருக்கிறோம். அரசியல் ஊதியம் தேடும் எந்த அரசியல் கட்சியும் தனித்தமிழ்நாடு என்று சொல்ல அணியமாயில்லை. உலக இனங்களிலே மிகப்பழமை யான இனமான நம் தமிழினம், யாரோ சிலரால் எங்கிருந்தோ ஆளப் படுவதற்கு மனமொத்து—இசைவளித்து—அமைதியாக இருப்பது கண்டு மனம் துன்பம் அடைகிறது. இன்றைக்குத் தங்களால் ஊட்டப் பட்டு வருகின்ற தமிழின உணர்வு ஒரு சிலரையாவது தன்மானத் தமிழர்களாக—விடுதலை வேட்கையுடைய தமிழர்களாக—உருவாக்கி யுள்ளது. அந்தச் சிலரும் துணிவோடு இன்னும் வெளிவரவில்லை.

இலைமறை காயாகத்தானே இந்த உணர்வுகள் பரவி வருகின்றன. என்னையும் உள்ளடக்கியேதான் கூறுகிறேன். துணிவுமிக்க—வலிமை மிக்க ஒரு தலைமை இருக்க வேண்டும். எந்த அடக்குமுறைக்கும் கலங்காத—எந்த ஈகத்திற்கும் அணியமாயுள்ள ஒரு தலைமை இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தத் தலைமையின்கீழ் படை திரளும்.

தனித்தமிழ் நாடு எனப் பேசவே துணிவில்லாத நாம் தமிழீழத்திற்கு-தனித்தமிழீழ நாட்டின் விடுதலைப் போர்க்குத் துணையாக இருக்கிறோம் எனச் சொல்வது நகைப்பிற் கிடமாவதேயன்றி வேறென்ன? தன் நாட்டு விடுதலையில் ஐம்பது விழுக்காட்டிற்கும் மேலாக வெற்றி பெற்று-விரைவில் தனிநாடு அமைக்கும் நிலையில் உணர்வுகளும்-ஒற்றுமையும் வளர்ந்துள்ள ஈழத் தமிழர்களைக் கண்டாவது நம் உள்ளமும் குருதியும் துடிக்க வேண்டும்; கொப்பளிக்க வேண்டும்! "உலகத் தமிழ்க் கழகம்" என்ற அமைப்பு உள்ளதை எத்தனைப்பேர் அறிவார்கள். அக்கழகம் வெறும் இலக்கியக் கழகமாக இருப்பதில் பயனில்லை. இன்றைய நிலையில் எந்த இயக்கமும் அரசியல் பூச்சு இன்றி மக்களிடையே சிறப்போ விளம்பரமோ பெறுவதில்லை. ஆட்களே இல்லாத தமிழரசுக்கட்சி கூட விளம்பரம் பெற்றிருக்கிறது என்றால் அஃது அரசியலால்தான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால்தான் உலகத் தமிழ்க் கழகத்தை அரசியல் கட்சியாக அறிவிக்க வேண்டும். அப்போதுதான் அதன் கொள்கைகள் மக்களால் பேசப்படும். ஏடுகளில் திறனாய்வு செய்யப்படும். மக்களை நேரடியாக அணுக முடியும். இந்த என்னுடைய எண்ணத்தைத் தாங்கள் சிந்தித்துப் பார்க்கவும்.

—கருமலைத் தமிழாழன். தருமபுரி-2.

0:599: பெருமதிப்பிற்குரிய ஆசிரியருக்கு. வணக்கம், இன்றைய தமிழக அரசு தன் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த உறுதிமொழிகள் பலவற்றைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது. நயன்மையான பல திட்டங்கள் இவ்வரசால் பாழாக்கப்பட்டு வருகின்றன. சிலதிட்டங்களே செயல்பட்டு வருகின்றன. அத்திட்டங்களுக்காகச் செலவிடும்பணத்தில் பெரும்பங்கை அதை ஏற்றுச் செய்யும் குமுகாயப் பகைவர்களே விழுங்கி வருகின்றனர். கையூட்டில்லா அரசென இவ்வரசை மனச்சான்றுள்ளவர்கள் ஒப்பமாட்டார்கள். படித்தவர்களிடையே வேலை இன்மையைப் போக்க இந்த அரசு கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆனால் இங்கொன்றும் அங்கொன்றுமாக மிகச்சிலர்க்கு வேலை வாய்ப்பளித்து விட்டுப் பல இலக்கம் பேர்க்கு அளித்ததாக விளம்பரம் செய்யப்படுகின்றது. குறிப்பாக வேலை இல்லா ஆசிரியர்கள் என்றால் இந்த அரசுக்குக்கடுகளவும் பிடிக்காது; அவர்களால் அனுப்பப்படும் மடல்களை எல்லாம் குப்பைத் தொட்டிக்கு அனுப்பிவிட்டு அவர்களின் மனத்துயரில் மகிழ்ந்திருக்கும் பெருமை உடைத்து இவ்வரசு. மேலுங் கூறுவோமேயானால் ஆங்கில இலக்கியத்தில் பாட்டம் பெற்ற ஆசிரியர்கள் மிகவும் இழிவாக நடத்தப்படுகிறார்கள்; மற்றவர்களுக்கு அளிக்கின்ற உரிமைகளை ஆங்கில இலக்கியப் பட்டம்பெற்ற ஆசிரியர்களுக்கு (M.A. & B.A. Eng. B.Eds) அளிப்பதில்லை; இதற்கு அவர்களை (க.மு; க.இ. ஆங்) உயர்நிலைப் பள்ளிகளில் பணியில் அமர்த்தாததே சான்றாகும். மேற்கூறியவற்றான் இந்நாட்டை ஒரு விடுதலை பெற்ற நாடு என்று எண்ணுவது தவறாகும். அறியாமையினின்றும், அடக்குமுறையின்றும், நயன்மை இன்மையினின்றும் இந்நாடு விடுதலை பெற வேண்டியுள்ளது.

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன். வேங்கைவாடி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).